விசேஷ விளம்பரத்திற்கு!

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

விசேஷ விளம்பரத்திற்கு!

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் தேதி ஆரம்பமானது.

[புத்தகம் ருக] யாழ்ப்பாணம்:— விஷு வருஷ புரட்டாதி மீ உசவ (1941 அக்டோபர் 9 வியாழக்கிழமை) [இலக்கம் சகூ]


## தமிழ் மரபு என்று ஒன்றுண்டு

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்

(முற்றொடர்)

ஒரு பாஷையின் சிறப்பியல்பு அப்பாஷையின் வாக்கிய அமைப்பிலே இருக்கிறது. மொழி நூலை ஆராய்ந்து கூறுபவர்கள், இன்ன இன்ன பாஷை இன்ன இன்ன இனத்தைச் சார்ந்தது என்று பிரித்து அமைத்திருக்கிறார்கள். வாக்கிய அமைப்பைக்கொண்டே இன்ன இனமென்று தெரிந்து கொள்ளலாமென்று அவர்கள் சொல்கிறார்கள். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், எச்சங்கள் என்பவை ஒரு வாக்கியத்தில் எந்த எந்த இடத்தில் அமையவேண்டுமென்ற வரையறை ஒரு மரபாகும்.

'குதிரை வேகமாகப் போகிறது' என்று சொல்வது தமிழுக்குரிய இயல்பான நடை. வேகமாகப் போகிறது, மெல்லப் போகிறது என்ற விஷயம் வந்தால், 'வேகமாகப் போகிறது குதிரை' என்றும் சொல்லலாம். சில சமயங்களில் ஏதேனும் ஒரு பயனைக் கருதி, 'குதிரை போகிறது வேகமாக' என்றே எழுதினால் அது தமிழாகாது.

மற்றப் பாஷைகளில் நீள நீளமான வாக்கியங்கள் இருக்கின்றன. அவற்றை மொழி பெயர்ப்பவர்கள் அந்த 'நீளத்தைத் தமிழிலேயும் புகுத்தி வெறும் வார்த்தைகளை நிரப்பி விஷயம் விளங்காமற் செய்துவிடுகிறார்கள்.' 'வார்த்தைக்கு வார்த்தை இருக்கிறதே' என்று அவர்கள் சொல்லலாம். உயிருள்ள ஒரு பிராணியின் உடலில் தனித்தனியே அங்கங்களைத் தனித்து வேறு இடத்தில் சேர்த்துவைத்து, 'இதோ பெயர்த்து வைத்திருக்கிறேன்' என்றால் நியாயமாகுமா? ஒவ்வோர் அங்கமும் அந்த அந்த இடத்தில் இருக்கிறதென்பது உண்மைதான். ஆனால், அந்த அங்கங்களெல்லாம் சேர்ந்த தொகுதியில் உயிர் இல்லாமற் போய்விடுமே அதற்கு என்ன செய்வது.

இப்பொழுது ஒருவாக்கியத்தைக் கவனிக்கலாம்.

'புது விஷயக் கண்டு பிடிப்பு, மனித முயற்சிக்கு அளித்துள்ள அதிக ஆற்றலும் விரிவும் நிகழ் காலத்துச் சிதிலமான, கலங்கும், மேற்சொன்னவற்றின் நிர்வாகத்தை அதிகமாக அதிகமாக விருதாவும் அபாயகரமானதாகவும் செய்கின்றன.'

இங்கிலீஷில் உள்ள ஒரு வாக்கியத்தின் மொழிபெயர்ப்பு இது. நான் செய்ததன்று; மொழி பெயர்த்து என்னிடம் கொடுத்திருக்கிறார்கள்.

மற்றொரு மொழி பெயர்ப்பைக் கேளுங்கள்.

'நூதன விஷய ஞானத்தால் ஏற்பட்ட மனுஷிய எத்தனத்திலுடைய சக்தி வியாபகத்தின் காரணமாக மேற்சொல்லப்பட்ட வியவஹாரங்களில் நிர்வாகம் தாத்காலிக நிலையில் சிதிலமாயும் பரஸ்பர விரோதமாயும் நடப்பதால், விரயமும் ஆபத்தும் அதிகமாகின்றன.'

இந்த மொழிபெயர்ப்பில் ஸம்ஸ்கிருத வார்த்தைகள் அதிகமாக இருக்கின்றன. இந்த இரண்டு வாக்கியங்களும் படிக்கும்போதே, விஷயத்தைத் தெளிவாக்கவில்லை. முதலிலே சொன்ன மொழிபெயர்ப்பில் அதிக ஸம்ஸ்கிருதக் கலப்பில்லை; ஆனால் வார்த்தைக்கு வார்த்தை வைத்துச் செய்த மொழி பெயர்ப்பென்று தெரிகிறது. 'புது விஷயக் கண்டுபிடிப்பு மனித முயற்சிக்கு அளித்துள்ள அதிக ஆற்றலும் விரிவும்' என்பது முதல் வாக்கியத்தின எழுவாய். 'நூதன விஷய ஞானத்தால் ஏற்பட்ட மனுஷியத்தனத்துடைய சக்தி வியாபகத்தின் காரணமாக' என்பது இரண்டாவது மொழிபெயர்ப்பின் ஆரம்பம். புது விஷயக் கண்டுபிடிப்பென்பது நூதன விஷயஞானமாக மாறியிருக்கிறது. இரண்டாவது சொன்னது தமிழ் வார்த்தைகளாக இல்லாவிட்டாலும் வாக்கியப் போக்கு முன்னதைவிட நன்றாயிருக்கிறது; நடை தமிழாக இல்லை.

புதிய புதிய பொருள்களையும் உண்மைகளையும் அறிஞர்கள் கண்டு பிடிக்கிறார்களென்பதும், அதனால் புதிய சக்தியும் தொழில் விரிவும் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன என்பதுமே இந்த முற்பகுதியின் பொருள். அந்தப் பொருள், மொழிபெயர்ப்பிலே அமையவேண்டும். வார்த்தைக்கு வார்த்தை இல்லாவிட்டால் ஒன்றும் குறைந்துவிடாது. எல்லாவற்றையும் சேர்த்து வாசிக்கும்போது தமிழ் மாத்திரம் தெரிந்தவர்களுக்கும் நன்றாக விளங்க வேண்டும். எழுதுபவருடைய கருத்தை அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இப்போது முன் சொன்ன வாக்கியத்தை இன்னும் தெளிவாகச் சொல்லலாமா என்பதைப் பார்க்கலாம்.

'புதிய புதிய விஷயங்களை அறிஞர்கள் கண்டு பிடிப்பதனால் மனிதனுடைய முயற்சி அதிகமான சக்தியையும் விரிவையும் அடைந்திருக்கிறது; அவற்றால் இப்போதே சிதறுண்டும் முரண்பட்டும் இருக்கும், மேற்சொன்னவற்றின் நிர்வாகமானது மேலும் மேலும் பயனற்றதாகவும் அச்சம் விளைவிப்பதாகவும் ஆகிறது.'

முன்னே சொன்ன இரண்டுவகையான மொழிபெயர்ப்புகளும் ஒரே வாக்கியமாக இருக்கின்றன. இப்போது சொன்னதோ இரண்டுவாக்கியங்களாக இருக்கிறது. சிறு சிறு வாக்கியங்களில் விஷயத்தைச் சொல்வதனால் அதிகத் தெளிவு உண்டாகும். வாக்கிய அமைப்பில் உண்டாகும் சிக்கல்களைச் சிறு வாக்கியங்களாகப் பிரித்தமைத்து மாற்றிவிடலாம். ஆனால் அப்படி அமைக்கும்போது எந்த வாக்கியம் முன்னே இருக்க வேண்டும், எது பின்னே இருக்கவேண்டுமென்பதைக் காரண காரியத் தொடர்பைக் கொண்டு நிச்சயிக்க வேண்டும்.

ஒரே விஷயத்தைச் சந்தர்ப்பத்திற்கும், யாரைப் பார்த்துப் பேசுகிறோமோ அவர்கள் நிலைக்கும் ஏற்றபடி சொல்ல வேண்டும். இந்த மரபு மாறினால் சொல்லும் விஷயம் தெளிவாகப் புலப்பட்டாலும் அழகாகத் தோற்றாது. ஓர் ஏழை வேலைக்காரனைப் பார்த்து, 'சோறு தின்றாயா?' என்று கேட்கலாம். ஒரு கனவானைப் பார்த்து அப்படிக் கேட்கக்கூடாது. கேட்பதில் இலக்கணக்குற்றம் ஒன்றும் இல்லை; அர்த்தமும் விளங்காமற் போகவில்லை. ஆனாலும் அப்படிக் கேட்பது தமிழன்று; தமிழ் மரபன்று. 'போஜனம் ஆயிற்றா?' 'நிவேதனம் ஆயிற்றா?' என்று கேட்பதும், துறவிகளை 'பிக்ஷை ஆயிற்றா?' என்பதும் சம்பிரதாயங்கள்.

நான் பிரெஸிடென்ஸி காலேஜில் இருக்கும்போது ஓர் ஐரோப்பிய கனவானோடு தமிழைப் பற்றிப் பேச நேர்ந்தது. இங்கிலீஷ் தெரியாத எனக்கும், தமிழ் தெரியாத அவருக்கும் இடையே துவிபாஷியாக ஓர் ஆசிரியர் இருந்தார். தமிழ்ச் சுவடிகளைப் பற்றிப் பேசினேன். அந்த ஆசிரியர் நான் சொல்வதை அந்தக் கனவானுக்கு மொழி

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## நகரசபைக்கூட்ட நடவடிக்கை

### தமிழிலும் சிங்களத்திலும் பேச அநுமதிக்கும் விஷயம்

சட்ட விதிகளைத் திருத்த ஆலோசனை

சிங்களத்திலோ தமிழிலோ பேச விரும்பும் அங்கத்தவர்களுக்கு அவ்வாறு செய்ய அநுமதியளிப்பதற்காக நகரசபைக் கூட்டங்களின் நடவடிக்கை சம்பந்தமான விதிகளைத் திருத்தியமைப்பது பற்றிக் கொழும்பு நகரசபை ஆலோசனை செய்து வருகிறது.

சட்டசம்பந்தமான ஸ்தாயி நிர்வாகசபை மேற்கூறியவாறு செய்துள்ள சிபார்சு ஐந்து நிரந்தர நிர்வாகசபைகளின் அடுத்த கூட்டத்தில் ஆலோசனைக்கு வரும்.

இந்த உபதேசம் நடைமுறையிற் சாத்தியமானதா என்பதைப் பற்றிச் சில அங்கத்தவர்கள் சந்தேகப்படுகின்றனர். நகரசபைக் கூட்டங்களில் நடைபெறும் பேச்சுக்களின் முழு விபரத்தையும் பெறுவது முடியாதென்றும், ஆங்கிலத்தில் அவைகளை மொழிபெயர்த்துக் கூறினால் அஃது ஒருவேளை சாத்தியமாகலாமென்றும் அவர்கள் நினைக்கின்றனர். அவ்வாறு ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதானாற், கூட்டங்களிற் காலதாமதம் ஏற்படுமென அவர்கள் கருதுகின்றனர்.

நகரசபையின் சேவைக்காரச் சிலர் நியமிக்கப்படும் பொழுது வாக்களிக்கும் முறைபற்றியும் ஒரு திருத்தம் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இரகசிய முறையில் வாக்களிப்பதற்குச் சௌகரியம் ஏற்படுத்துவதற்காகவே குறித்த திருத்தம் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

நகரசபைக் கூட்டங்களில் வித்தியாசமான வாக்குகள் அளிக்கப்படும் பொழுது கைகளை உயர்த்தியும் அல்லது பெயர்களைக் கொண்டுந்தான் எப்பொழுதும் வாக்களிக்கப் பட்டு வந்திருக்கிறது.

நிரந்தர நிர்வாகசபைகளின் கூட்ட நடவடிக்கை விதிகள் பற்றிய மற்றொரு திருத்தமும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இத்திருத்தத்தின்படி குறித்த கூட்ட நடவடிக்கைகளின் ஒழுங்கு முறைகள் சீர்திருத்தி யமைக்கப்படும்.

## இலக்கிய அரங்கு

### கொழும்பிலே புதிய ஸ்தாபனம்

தமிழ்மொழி வளர்ச்சிக்கும் இலக்கிய ஆராய்ச்சிக்கும் வேண்டிய ஒழுங்குகளைப்பற்றிக் கலந்தாலோசிப்பதற்காகக் கொழும்பிலுள்ள தமிழறிஞர்கள் பலர் கூடி வெள்ளவத்தைத் தமிழர் சங்க மண்டபத்தில் சென்ற 21. 9. 41 ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்ரீ எஸ். பெரியதம்பி அவர்கள் தலைமையில் இலக்கிய அரங்கு என்ற ஒரு கழகத்தை அமைக்க வேண்டுமெனத் தீர்மானித்துள்ளார்கள். இக்கூட்டத்துக்கு கொழும்பு றோயல் கல்லூரித் தமிழாசிரியர் திரு அ. வி. மயில்வாகனம் காரியதரிசியாகக் கடமையாற்றினர்.

இவ்விலக்கிய அரங்கிற்கு ஆகவேண்டிய விதிகளை யமைப்பதற்கும் ஆரம்ப பொதுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கும் மற்றும் காரியங்களைக் கவனிப்பதற்குமாக தற்காலிகமாகத் திருவாளர்கள் க. சிற்றம்பலம், குல. சபாநாதன், சோ. சிவபாதசுந்தரம், அ. வி. மயில்வாகனம் (காரியதரிசி) ஆகிய இவர்களைக் கொண்ட ஓர் உபசபை நியமிக்கப்பட்டது. அடுத்த கூட்டத்தைப்பற்றிய விவரம் பின்னர் வெளியிடப்படும்.

கடித

## ஜெருஸலத்தின் கிராண்ட் முப்தி

### ஜப்பானிய ஸ்தானிகர் காரியாலயத்தில் இருந்தார்

கெய்ரோ, செப். 22உ

ஜெருஸலத்தைச் சேர்ந்த கிராண்ட் முப்தி டெஹ்ரானிலுள்ள ஜப்பானிய ஸ்தானிகர் காரியாலயத்தில் இருக்கக் காணப்பட்டதாக டெஹ்ரானிலுள்ள ஒரு நம்பத்தகுந்த வட்டாரம் அறிவிக்கிறதென்று அல்மோகட்டாம் என்னும்பத்திரிகை கூறுகிறது.

## இன்னு மோர் அமெரிக்கக் கப்பல்

### டோர்பிடோவுக்குப் பலி

வாஷிங்டன், அக் 4

பனுமாவிற் பதிவு செய்யப்பட்ட "ஐ. ஸி. ஒயிட்" என்னும் எண்ணெய்க் கப்பல் சென்றமாதம் 27-ந் திகதி டோர்பிடோ வெடியால் தாக்கப்பட்டதென்றும், அதன் மாலுமிகளில் 16 பேர்களை நோர்மாகிலே என்னுங்கப்பல் காப்பாற்றியதாகவும் அறிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் அமெரிக்க நடுநிலைமைச் சட்டத்தைத் திருத்தவேண்டிய நிலையைக் காட்டுகிறதென்ற அபிப்பிராயத்தை உண்டாக்கியிருக்கிறது.

## நாம் செய்த தென்ன?

(திரு—சங்கு—சாது)

### 1. நாவலர்

சைவத்தையும் தமிழையும்வளர்க்க இடையறாது உழைத்த பொதுநல வீரர்—சைவசித்தாந்தத்தையும் செந்தமிழையுந் தொழுதுவிட்டு மேமேலோங்கச் செய்வதற்காக நைட்டிகப் பிரமசரிய விரதம் பூண்டு சலியாதொழுகி ஓய்வெடாது சேவை செய்த இந்த ஐந்தாம் சமயகுரவர்க்கு எமது நன்றியறிதலைக் காட்டுவதற்கு நாம் செய்ததென்னே! நாவலர் தாம் பெரியாராதல் வேண்டுமென்றெண்ணிச் சேவைசெய்தவரல்லர். அவர் தம்மைப்போல் தமிழர்கள் அனைவரும் நல்லொழுக்கமுடையவர்களாயும், சிவபக்தர்களாயும், சமயம் மொழி நாடென்பவற்றில் அபிமானமுடையவர்களாயும் வாழவேண்டுமென்றே முன்மாதிரியாக நடந்து தொண்டாற்றினர். அவர்ஞாபகார்த்தமாக நாம் பெருஞ் செயல்கள் ஒன்றையும் செய்யாவிட்டாலும் அவர் காட்டிய முன்மாதிரியைக் கடைப் பிடித்து—அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி நாம் செய்ததுதானென்னே! எமது நலத்திற்கும் முன்னேற்றத்திற்கும்—எமது சந்ததியார் நலத்திற்கும் நல்வாழ்விற்குமாயினும் நாம் ஏதனும் அவர் சொல்லிய முறைப்படிசெய்து வருகின்றோமா?

"தமிழ்க் கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள், முக்கிய ஸ்தலந்தோறும் வித்தியாசாலைகள் ஸ்தாபித்தலும் சைவப் பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டு, கிரமமாகக் கற்றுவல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசாரகர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினாலே நல்லொழுக்கமும், விவேகமும் கல்வியில் விருப்பமும், இடையறா முயற்சியும், ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீட்சிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து உயர்வாகிய இலக்கண இலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையும் கற்பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்." என்றார் நமது நாட்டின் தொல்பெரும் சமயமான சைவசித்தாந்தத்தை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தொழுகிய வரம்பிலாப் பெரும்பேற்றைப் பெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். அவர்தம் விருப்பப்படி நமது நாட்டிற்கு வேண்டிய பாடசாலைகளை வேண்டிய வேண்டிய இடங்களிலெல்லாம் நாம் ஸ்தாபித்து விட்டோமா? தற்காலத்திற்கு இன்றியமையாத பெண் வித்திப் பாடசாலைகளை ஏற்படுத்துகிறோமா? அநாதப் பெண் வித்திப் பாடசாலைகளைத் திறந்துவைக்கிறோமா? எமது சைவப்பாடசாலைகள் எவற்றிலும் சமயக்கல்வி—சைவசாத்திரங்கள—சைவசித்தாந்தக் கலை முதலியவைகளைப் புகட்டி வருகிறோமா? அவர் விரும்பியபடிமுக்கியமாய்த் தலங்கள்தோறும் இடைவிடாது சைவப் பிரசாரணஞ் செய்வித்து வருகிறோமா? அப்பெரியார், சைவப்பாடசாலைகளிலேயே சைவப்பிள்ளைகள் அனைவரும் கல்வி கற்க வேணுமென்ற சித்தனை உடையாராய்த் தொண்டாற்றினர். அவர் எண்ணந்தான் நிறைவேறவும் பொருட்டேனும் அல்லது உயர்வாகிய நல்லொழுக்கமுடைய சைவர்களாய் எமது பிள்ளைகள் வாழவேண்டு மென்றேனும் நினைத்து எங்கள் பிள்ளைகள் அனைவரையும் சைவப் பாடசாலைகளுக்கு அனுப்பி வருகிறோமா? உயர்வாகிய சைவ சாத்திரங்களையும், சமயக் கொள்கைகளையும் கற்றுணர்ந்துடைக்கும் உபாத்தியாயர்களையா நாம் நமது பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமித்து வருகிறோம்?

எமக்கு வேண்டிய போதிய சைவப் பாடசாலைகள் எமதூரில் எமக்கில்லையாம். சைவப்பிள்ளைகள் அனைவரும் சைவப் பாடசாலைகளிற் கல்வி கற்று வாவில்லையாம். சில சைவப் பாடசாலைகளில் சமயக் கலை பயிற்றப்படவில்லையாம். இப்படி எமது நிலை இன்றுமிருப்பது முறைதானா? இது தருமந்தானா? இந்நிலையைப் பார்த்துக்கொண்டிருக்கும் நாம் சைவசமய அபிமானமுடையவர்களா? சி—ச்—சி! எமக்குச் சுய உணர்ச்சி இல்லையா! வெட்கமில்லையா! இந்த நிலையில் எமது நாடிருப்பதை நாம் பார்த்துக்கொண்டு வாளாவிருப்பது எமக்கடாது. இது பெரும் துரோகமான செயல். இதைவிடச் சமயாபிமானம்பாஷாபிமானம், தேசாபிமான மில்லாத செயல் பிறிதுமுண்டோ? இப்படித்தானு நாம் நமது நாவலரைக் கௌரவப்படுத்துவது!

இலங்கைத் தமிழர்களாகிய எமக்குத் தேசாபிமானம், பாஷாபிமான மிருக்குமானால், நாம் கிறிஸ்தவர்களெனினும், சைவர்களெனினும் சரி எமது பிள்ளைகளைப் பிறநாட்டார் பாடசாலைகளுக் கனுப்புவோமா? என்றென்றைக்கும்நாம் ஊண், உடை, கல்வி முதலியவற்றின் பொருட்டுப் பரதேசத்தில் தங்கியிருப்பதா? இது எமது நாட்டின் சற்றேனும் பற்றில்லாமலிருக்கிறோம் என்றதை உள்ளங்கை நெல்லிக் கனிபோற் காட்டுகிறது. இக்தக்காலத்தற் பரதேசப் பாடசாலைகளிலும் தேவார திருவாசகங்கள் ஓதப்படுகின்றனவென்று சிலர் மகிழ்வுறுகின்றனர். இவர்கள் புத்திக்கு மெச்சுகிறோம்! தாய்ப்பால் பற்றியவைதப் புலி விடுமா? அதுபோலவே அக்கியர்களும் தாம் கைபற்றிய பிள்ளைகளை இலகுவில் கைவிடுவார்களா? ஏதோ தந்திர மந்திரஞ் செய்து தானே அவர்களைப் படிப்பிக்கப் பார்ப்பார்கள். இதில் என்ன விநோதம் ஐயகோ! என்ன கொடுமை! ஆடவர்களை மாத்திரமல்லப் பெண்களையும் இன்னும் பிறநாட்டார் பாடசாலைகளுக் கனுப்பி வருகிறோமே! இலங்கையில் தமிழைத் தாய்ப் பாஷையாகக் கொண்ட மக்கள்—தேசாபிமானமுள்ள, மக்கள் யாதுவாரணம்பற்றியோ கல்விகற்பதற்கும் பிறதேசத்தவர்கள் பாடசாலைகளை நாடுகின்றனர்? ஊண், உடை, படிப்பு; பிச்சை என்பனவற்றிற்கும் தமது காலில் நில்லாது பிறர் காலில் நிற்கும் இந்த அடிமை முறையை—சுயவுணர்ச்சி இல்லாத எமக்கு ஏற்பட்ட இந்த அடிமைத் தளையை வெட்டி எறிய வீறிட்டெழுவார் ஆருமில்லையா? கிறிஸ்தவர்களோ வேறெந்தச்சமயத்தவர்களோ

தொடர்ச்சி 4ம் பக்கம்

## சிவஞானபோதம்

கூ-ஆம் சூத்திரம்

[தருமபுர ஆதீனம்: மெய்கண்டான் சித்தாந்தமகாநாட்டிற் படிக்கும் வண்ணம், யாழ்ப்பாணம் வச்சவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் எழுதிய கட்டுரை. (28-8-41)]

(முற்றொடர்)

### இரண்டாம் அதிகரணம்

பதிஞானத்தைப் பெறுதற்கு உபாயம் கூறுதல்

இனி ஞானக் கண்ணாலே காணுமாறு எங்ஙனம் என்னும் அவாய் நிலையை நீக்கும் பொருட்டு இரண்டாம் அதிகாரணம் எழுந்தது.

இனி, அசத்தாயுள்ள வன்ன பேதங்களை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞானசொருபமென்றுணரற் பாற்று. அது இரண்டாமதிகரண மேற்கோள். இதன் கருத்தை,

"பாசத்திலே பற்றற்றால்
அரன் வெளிப்படுவன்"

என்ற சூர்ணிகை தெரித்து உணர்த்துகின்றது.

மேற்கூறிய பதிஞானத்தைப் பெறுமாறு யாங்ஙனமெனில்; பளிங்கின் சொருபத்தைக் காட்டாது மறைத்து நின்ற வேற்று நிறங்களை அவை நிலையற்ற வேற்று நிறங்களெனக் கண்டு நீற்பின் அவ்விடத்து நிலையுதலுடைத்தாய் விளங்கித் தோன்றும் அந்தப் பளிங்கின் சொருபம்போல, நிலைத்திருக்கின்ற பதிஞானத்தின் சொருபத்தைக் காட்டாது மறைத்து நிற்கின்ற நிலையில்லாத அசத்தாகிய பிரபஞ்சங்களை இவை நிலைத்திருக்கும் பொருளல்ல என்று காணில் அங்ஙனம் கண்டவிடத்துச் சிவஞானத்தில் சொருபம் தனக்குப் பற்றுக்கோடு பிரிதில்லாததாய் விளங்கித் தோன்றும் என்பதாம்.

"இனி அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞான சொரூபமென்றது, வேற்றியல்பாகிய வன்ன பேதங்களை வேற்றியல் பென்று கண்டு கழிப்பின் உளதாய் நிற்பது படிக சொரூபமாம் இணையான்" என்பதனால் மேற்கோள் வலியுறுத்தப்பட்டது காண்க.

இவ்வதிகரணத்தில் அசத்தை அசத்தென்று கண்டவிடத்துத் தோன்றுவது ஞான சொருபமோ சூனியமோ என்பது ஐயம். சூனியமென்பது பூருவ பக்ஷம்; ஞான சொருபமென்பது சித்தாந்தம்.

அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்று காணும் முறை எவ்வாறெனிற் கூறுவாம். ஞானகுரு போதித்த உபதேசப் பொருளை அறிந்து பரமேசானுடைய ஸ்ரீ பாதத்திலே தற்போதம் ஜீவியாமல் அந்த ஞானமேயாய் நின்று, பைசாச பதத்தினுடைய அட்டமா சித்தியை நோக்க எண்மடங்கேற்றமாகிய அட்ட சித்தியுடைய பிரமபத முதலியவற்றின் இவ்விய மகளிரும் அதிவிசித்திர மாடமும் மாளிகையும் முதலிய போக்கியப் பொருட் சிறப்புக்களினாலே அழகு பெற்ற காலாக்கினி ருத்திரபுவனம் முதல் அநாசிருத புவனமீறாகிய எவ்வகைப்பட்ட புவனமும் இதற்குமுன் அனுபவித்துக் கழிந்தமையின் வாளா சோறெனக் கண்டு அருவருத்துவிட்டு, மந்திரம் முதலிய அறுவகை அத்துவாவுட்பட்ட மூவகைப் பிரபஞ்சமும் காரண ரூபத்திற் சிறிதுங் காணப்படாமையினால், சித்திரவடிவம் காணபவருக்குக் காணப்படாததாய் அதன்கண் மறைந்த சித்திர வடிவம்போல முழுப்பொய்யெனக் கண்டிருத்தலாம். அது சிவஞான சித்தியாரிலே,

குறித்தடியி னின்றட்ட
குணமெட்டுச் சித்தி
கோகனதன் முதல்வாழ்வு
குலவுபத மெல்லாம்
வெறுத்துநெறி யறுவகையு
மேலொடுகீ ழடக்க
வெறும் பொய்யென
நினைந்திருக்க †

எனக் கூறப்பட்டமையினால் நன்கு தெளியப்படும்.

எத்தனைதான் கற்றாலு
மெத்தனைதான் கேட்டாலு
மெத்தனைசா நித்தாலு
மின்புறு—சித்தமே
மெய்யாகத் தோன்றி
விடுமுலக வாழ்வனைத்தும்
பொய்யாகத் தோன்றுதபோது*
அசித்தியத்தை நித்தியமென்
றுதரிக்கும் பொல்லா
மனித்தருடன் கூடி
மருவார்—தனித்திருந்து
மோனத்தமாஞ் சிவத்தின்
மூழ்கி மலத்தையறுத்
தானந்த மாயமுது வார்.¶

எனவரும் அருள்வாக்கும் இதனை வலியுறுத்தும்.

மேன்மையோ டமர்ந்த
ஞான சம்பந்த
விண்டுணைத் தமியனேன்
வேண்டுவ தியாதெனின்
பிறவா நெறிபெறப் புரிவதுவே
அங்கது புரிதற் கரிதெனி
னிங்கொரு
சனனம்யான் வேண்டுவ
தினிதரு ளெனக்கே
அதுவே,
இந்திரு கிழக்கி ழாகவிற் றிருக்கு
மந்திர ஞகிவாழ்க்
திருப்பதோ வன்றே
மலரோனுகி மன்னுயிர்த்தொகுதி
பலர்புகழ்த் திசைபப்
படைப்பதோ வன்றே
அடலரா வணையிலறி துயிலமர்ந்த
கடவுளாயுலகங்காப்பதோவன்றே
அவைதாம்,
ஆரா வின்பமென் றறும்
பெயர் பெறினும்
வாரா வல்வினை வருவிக் கும்மே

எனச் சிவஞானச் செல்வராகிய குமரகுருபர சுவாமிகள் இந்திரன், பிரமன், திருமால் என்னும் தேவத் தலைவருடைய பதங்கள் பிறவா நெறியைத் தாமாட்டா என்பதையும் அவை பயக்கும் இன்பமெல்லாம் நிலையற்றன என்பதையும் அழகாகக் கூறியிருப்பது காணத்தக்கதாம்.

போகம்வேண்டி வேண்டிலேன்
புரந்தராதி யின்பமும்
ஏகநின் கழலிணை யலாதிலேன்

என நமது சமயாசாரிய மூர்த்திகள் ஓதியருளினமையும் காண்க.

இனி, அணிமாதி அட்டசித்திகளாலும் திருவடி ஞானம் கைகூடாது என்பது

அட்டமா சித்திமுத லனைத்
துள்ள பேறுகளுங்
கட்டமாங் கதிக டரும்
பாகநிகா ணக்கொடா
மட்டிலா மாலையாய்
வியாபகமா யறிவாகி
இட்டலா சமுத்திய
துமவற்றுற் கிடையதே ‡

என்னுஞ் செய்யுளால் உணரப்படும்.

கட்டமாங் காயங் கல்பமுத்துக்
கற்றாலு
மட்டமா சித்தி யடைந்தாலு
—மிட்டம்
பரம சுகமே பதியாத போது
நிரம சுகமே தெளி ※

(தொடர்ச்சி 4 ம்பக்கம்)

† சிவஞானசித்தி கூ. ரு.
* ஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகள் சிவபோகசாரம். ருகச.
¶ ஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகள் சிவபோகசாரம். கஉக.
‡ தேவிகாலோத்தரம்.
※ சிவபோகசாரம்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ஸ்ரீ புரட்டாதி மீ உ௪உ வியாழக்கிழமை

## இக்கால இளம் பெண்கள்

கொழும்பு முதலிய பட்டினங்களில் வசிக்கும் இக்காலத்தில் இளம் பெண்களுட் பெரும்பாலர் தங்களுக்குப் பொருந்தாத சுயாதீனத்துடன் நடக்கத் தலைப்பட்டுக் கொண்டனரென்றும், அவர்கள் தங்கள் மூத்தோர்சொல்லை மதித்து நடக்கின்றிலரென்றும் ஒரு சாதியார் உன்னத நிலையில் இருத்தற்குப் பிரதான காரணர் அச்சாதிக்குரிய பெண் மக்களேயென்றும், ஆனதாற் பெண் மக்கள் இளம் பிராயத்திற்றானே நல்ல முறையிற் பயிற்றி வளர்க்கப்படல் வேண்டுமென்றும், காதல் மணங்களே காலகதியில் தம்பதிகள் கல்யாணப் பதிவை நீக்கிப் பிரிதற்கும், நாயகன் நாயகிக்கிடையே பலவகையான பிணக்குக்கள் உண்டாதற்குக் காரணமென்றும் சிங்களப் பெரியாரொருவர் இற்றைக்குச் சில நாட்களின் முன்னர்ச் செய்த பிரசாரண வாயிலாக அறிந்துள்ளோம். அப்பெரியார் கூறியவை அத்தனையும் நிசமாகும்; ஆனால் அந்தப் பெரியார் இங்குள்ள தமிழ் மகளிர்மீது இப்படியான அபவாதத்தைச் சுமத்தினரல்லர்; இது தமிழ் மகளிரெல்லார்க்கும் பெருமிதத்தைத் தருவதாகும்.

'மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவராய்ப் பூண்டுய்ப்பி னல்லால் ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
செல்லாதெத் திறத்து நின்று'

என்ற பிரகாரம் இல்லறத்தை இனிது நடத்தற்காகிய விதிகளும் முறைகளும் எம் பெண் மக்களுக்குப் பல விதிக்கப்பட்டன. இந்நாட்டுப் பெண்மக்கள் பண்டு தொட்டு இக்காலம் வரை இயன்றவரையில் இல்லறத்தை இனிது நடத்தி வருகின்றார்கள் எனக் கூறுதல் மிகையாகாது.

ஆனால் இக்காலத்திலே ஊட்டப்படும் விபரீத கல்வி காரணமாகவும், பெற்றோர் தம் பெண் மக்களுக்கு உதவும் எல்லைக்கு மேற்பட்ட சுயாதீனங் காரணமாகவும், போலிச் சமத்துவத்தைப் பெண்பாலார் விரும்புவதனாலும், ஆண்களுட் பலர் மேலைத் தேசப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றித் தம் மகளிர்க்கும் சுயாதீனம் அளிக்க வேண்டுமென விரும்பிக் கொண்டமையினாலும், கன்னியரென்ற கட்டுப்பாட்டைக் கைவிட்டமையினாலும், குறித்த சிங்களப் பெரியார் பெண்மக்கள் விஷயமாகச் சொன்ன சில தோஷங்கள் நம் பெண் மக்களிடத்தும் நுழையப் பார்க்கின்றதெனலாம். இப்படியான குற்றம் யாதுங் காணப்படின் அதனை முளையிற்றானே இன்னே களைந்து விடல் வேண்டும். கல்வி யூட்டும் விஷயத்தில் ஆண்களுக்கு வேறு பெண்களுக்கு வேறான முறையிற் கல்வியூட்டுதல் வேண்டும்; இரு பாலார்க்கும் ஒரே வகைக்கல்வி யொத்ததாக மாட்டாது; உப்புப் பொதி சுமந்து கொண்டு ஆற்றிற் கூடாகச் செல்லுங் கழுதையின் பாரம் கரைந்து இலகுவாதல் போலக் கம்பலப் பொதி சுமந்து நதிக்கூடாகச் செல்லுங் கழுதையின் பாரங் குறையப்போவதில்லை; பெண்பாலாருள் அந்த அந்தத் தொழிலிற்கென வுரிய பெண்கள் சபைகளிலிருந்து சங்கீதம் படித்தலும், ஆங்கிலே வேடம் பூண்டு நாடகம் நடித்தலும் ஏற்குமே யொழியக் குலத்திற் பிறந்த மகளிர்கள் அங்ஙனஞ் செய்தல் சிறிதும் அடாததாகும். இப்படியான பொருந்தாச் செயல்கள் இக்காலத்துள்ள கலாசாலைகளிற் செய்யப்படுதல் பெரிதும் ஆபத்திற்கிடமானது.

மேலும் பெண்பாலார்க்கு இல்லற விதிகளைக் கூறும் திருக்குறள் போன்ற நீதிநூல்கள், சமய நூல்கள், பழைய உத்தம பத்தினிகளின் சிறந்த சரிதைகளைக் கூறும் நூல்கள் முதலியவற்றை நன்கு பயிற்றல் ஆவசியகமாகும்; இவ்விஷயத்திற் பெற்றோர் ஆசிரியர்கள் பெரும் பொறுப்பினை ஏற்றுக் கருமமாற்றுதல் வேண்டும்.

## தேர்தலும் ஆசிரியர்களும்

### அவர்கள் அபேட்சகர்களாக நிற்கலாமா?

கல்வி நிருவாகசபை ஆலோசனை செய்யும்

பொது ஸ்தாபனங்களின் தேர்தல்களில் ஆசிரியர்களை அபேஷகர்களாக நிற்க அநுமதிக்கலாமா என்பது பற்றிக் கல்வி நிருவாகசபை கூடிய சீக்கிரத்தில் ஆலோசனை செய்ய இருக்கிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள சென். பத்திரிசியார் கல்லூரித் தலைமையாசிரியரான வணக். டி. லோங், தமது பாடசாலையிலுள்ள ஆசிரியர்கள் பொதுஸ்தாபனத் தேர்தல்களில் அபேக்ஷகர்களாக நிற்கக் கூடாதென்று ஓர் ஒழுங்கு விதியை நடைமுறைக்குக் கொண்டுவர அதிகாரமளிக்கும்படி கல்விமந்திரிக்கு மனுச்செய்து கொண்டதன் பேரில் இவ்விஷயம் எழுந்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சென்ற பட்டினசபைத் தேர்தலுக்குச் சிறிது முன்னதாக வணக். லோங், இது விஷயமாகக் கல்வி மந்திரிக்கு மனுச்செய்தார். அத்தேர்தலில் அவரது பாடசாலை ஆசிரியர்கள் சிலர் அபேக்ஷகர்களாக நிற்க உத்தேசித்தனர்.

அத்தகைய தேர்தல்களிற் போட்டியிட ஆசிரியர்களை அநுமதிப்பதாற் பாடசாலையின் நலன் பாதிக்கப்படுமென்றும் அவர் கூறியிருக்கிறார். பிரதானமாக ஒரே பாடசாலையைச் சேர்ந்த இரு ஆசிரியர்கள் ஒருவரோடொருவர் போட்டியிட்டாற் பாடசாலை பணியுள்ள இரண்டு அரசியற்கக்ஷிகளின் போர்க்களமாக மாறிவிடக்கூடுமென்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அந்தச் சமயத்தில் ஆசிரியர்களைப் பட்டினசபைத் தேர்தலில் அபேக்ஷகர்களாக நிற்க அநுமதிப்பதா இல்லையா என்பதில் வணக். லோங், தமது சொந்த விருப்பத்தின்படி நடந்து கொள்ளலாமென்று கல்வி நிருவாகசபை தீர்மானித்தது.

இப்பொழுது இது சம்பந்தமாக ஒரு திட்டமான தீர்ப்பைக் கூறுவதற்காக இவ்விஷயம் மீண்டும் கல்வி நிருவாகசபை முன்னிலையிற் கொண்டு வரப்பட இருப்பதாக அறியப்படுகிறது.

அரசியல் உரிமைகள் சம்பந்தமான காரியங்களைச் செய்வதிற் சம்பூரணமான சுதந்திரம் இருக்க வேண்டுமென்று ஆசிரியர்கள் வாதாடி வந்திருப்பதை முன்னிட்டு இவ்விஷயம் அதிக பிரதானம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அவர்களிற் சிலர் பொதுவாழ்க்கையிற் பங்குபற்றிக் கொள்வதற்கு இடைஞ்சல் ஏற்படாதிருப்பதற்காக அரசாங்கத்திடம் சேவை செய்யாமல் வெளியிற் சேவை செய்வதை விரும்பியிருக்கின்றனர்.

## அரிவாளால்வெட்டிக் கொலை

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

சபை முதலானோர்களும் வேறு பேரும் சாக்ஷியம் கூறியபின்னர் ஜூரிமார் ஏகமனதாக எதிரியைக் கைபிழைபாடாய்க் கொலை செய்த குற்றச்சாட்டிற்குக் குற்றவாளியாகக் காண்பதாக அபிப்பிராயந் தெரிவித்தனர். அவ்வூர் விதானையார் எதிரி நன்னடத்தையுடையவனென்றும் நிமிஷக் கோபம் கொள்ளக் கூடியவனென்றும் நீதிபதிக்கு அபிப்பிராயந் தெரிவித்தார். நீதியரசர் எதிரியினுடைய இளம் வயதையும் நன்னடத்தையையும் உத்தேசித்து எதிரிக்கு ஏழுவருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

# உலகம்பலவிதக்கதை

(முற்றொடர்)

### கடலுங் கலங்கித் தெளியும்

அன்றிரவுதானே பின்னரும் ஒருமுறை மருந்துங் குடிநீருங் கொடுக்க நோய் படிந்து சுந்தராம்பிகை மயக்கந் தீரப்பெற்றனள். "அக்கா! ஆச்சி! தாகமாயிருக்கிறது" எனலும், தமக்கை தேநீர் வைத்திருந்ததை வாங்கிச் சிறிது அருந்தி விட்டு "அக்கா, நீங்கள் என்னை விட்டுப் பயந்து விட்டீர்களா? மனக் கலக்கமடைந்தீர்களா, ஆச்சி எங்கே? முருகன் கிருபையால் எனக்கு ஒரு கெடுதியும் வரமாட்டாது அக்கா..." என்று சொல்லுதற்கிடையிற் சாமியம்மாளும் அங்கே வந்தாள். "தங்கைச்சி, சுந்தரம், எங்களைச் சற்று நேரம் வெருட்டி விட்டாயே அம்மா! உன் வருத்தம் அல்ல வருத்தம் உன் வருத்தத்தைக் கண்டு உனது அக்காள் பட்ட வருத்தம் கொஞ்சமல்லவே..." என்று சாமியம்மாள் சொல்லுதலும், "ஆச்சி, தங்கச்சியை இப்பொழுது சிரமப்படுத்தவேண்டாம், எல்லாம் விடிந்தபின் பேசுவோம்,..." என்று பரிவுடன் அமிர்தாம்பிகை சொன்னாள். "அக்கா, இப்படி வாருங்கள், என் பக்கத்தில் இருங்கள், எனக்கு ஒரு சிரமமுமில்லை, இராமண்ணா எங்கே, நீங்கள் ஒருவருமே இன்னமும் ஏதும் உண்ணவில்லைப் போலும், முகவாட்டத்துடன் காணப்படுகிறீர்கள், நான் இப்படியே படுத்திருக்கிறேன், ஆச்சி, நீங்கள் மூன்று பேரும் ஏதும் உண்டுவிட்டு வந்தாற்றான் எனக்கு மன ஆறுதலாக இருக்கும்" என்று சுந்தராம்பிகை மெல்ல மெல்லச் சொன்னாள். இதற்கிடையில் தங்கையின் பக்கத்திலே இருந்த அமிர்தாம்பிகை "கண்ணே, எங்களுக்குப் பசியில்லை, விடிவதற்கு இன்னுங் கொஞ்ச நேரந்தான் இருக்கிறது; நீ அதையிட்டுக் கவலைப்படவேண்டாம்" என்று சொல்லித் தன் சகோதரியின் கன்னத்தைத் தடவினாள். "அக்கா, எனக்கு அதிக தலைவலியோடு காய்ச்சலும் காய்ந்தது; அந்த நேரம் என்னால் நோய் தாங்கமுடியாமலிருந்தது; பிறகு அயர்ந்து விட்டேன், அதன் பின் நடந்தது என்ன? அக்கா" என்று சுந்தராம்பிகை வினவ, தமக்கை, அறிவு மயங்கியது தொடக்கம் டக்டர் வந்து மருந்து கொடுத்தது ஈறாக எல்லாவற்றையுஞ் சொல்லி, அதிகாலையில் அந்த டக்டர் வருவாரென்பதையும் டக்டருடைய பெருந்தன்மைகளையும், தாங்கள் அவருக்குக் கடமைப்பட்டிருப்பதையுங் கூறி முடித்தாள்.

### "கனவல்ல, கண்ணே, உன் நினைவு"

"அக்கா, அந்த டக்டர் நீங்கள் கொடுத்த பணத்தை வாங்க மறுத்து விட்டாரென்று சொன்னீர்களே, அப்படியானால் அவர் ஒரு நல்ல மனுஷன் போலிருக்கிறது; ஆனால் தருமத்தில் வைத்தியஞ் செய்விப்பது எங்களுக்கு அழகல்ல, கடவுள் கிருபையால் எங்களிடத்தில் போதிய பணம் இருக்கிறது; அதிகாலையில் அவர் வருவாரென்று சொன்னீர்களே, அப்படி வரும்போது பணத்தைக் கொடுத்து விடுங்கள்" என்று சுந்தரஞ் சொல்ல, "தங்காய், அப்படித்தான் செய்ய நானும் நினைத்திருக்கிறேன்" என்று தமக்கை பதில் சொன்னாள். "அக்கா, நான் சற்று முன்பு அயர்ந்து கிடந்தபோது ஒரு சொப்பனங் கண்டேன்; அதைச் சொல்லக் கூச்சமாகவிருக்கிறது...." என்று தங்கை சொல்ல, தமக்கை "எனக்குச் சொல்ல ஏன் கூசுகிறாய்; கூசாமற் சொல்லம்மா" என்றாள்; "வேறொன்றுமல்ல அக்கா, நாங்கள் திருவண்ணாமலை மடத்திலே தான் இருப்பதாகவும், அங்கே இருக்கும் போது எனக்குச் சடுதியில் நோய் வந்ததாகவும், நீங்கள் ஆச்சி ராமண்ணா எல்லாரும் என் நோயையிட்டுக் கவலைப்பட்டு வருந்துவதாகவும், அப்பொழுது இராமண்ணா பதைபதைத்துக் கவலையுடன் ஓடிப்போய், எங்களுக்கு அந்த வழியில் உதவி செய்த அந்த டக்டரையே அழைத்துக் கொண்டு வந்ததாகவும், அவர் மருந்துதர நான் குடித்தபின் நோய் மாறியதாகவும் கனவு கண்டேன்; இதனை உங்களுக்குச் சொல்லக் கூச்சப்பட்டு இவ்வளவு நேரமும் சொல்லாமல் விட்டேன்" என்று சுந்தராம்பிகை கூசிக் கூசிக் கூறினாள். அதனைக் கேட்ட அமிர்தாம்பிகை புன்சிரிப்புடன் "அது கனவல்ல, கண்ணே, அது உன் நினைவு" என்று சொல்ல, "போங்கள், அக்கா, அப்படிப் பரிகாசஞ் செய்வீர்கள் என்று பயந்துதான் இவ்வளவு நேரமும் உங்களுக்குச் சொல்லக் கூசினேன்" என்று சொல்லி வருந்த, "இல்லை, கண்ணே, இனிமேல் நான் அப்படிச் சொல்லமாட்டேன்" என்று தன் தங்கைக்குச் சமாதானஞ் சொன்னாள்; இதற்கிடையில் சமயலறைப் பக்கம் போயிருந்த சாமியம்மாள் தேநீர் கொண்டுவந்து இருவருக்கும் கொடுத்து இராமனுக்குங் கொண்டுபோய்க் கொடுத்துத் தானும் உண்டாள். ஆலயின் எல்லோரும் மன ஆறுதல் அடைந்தவர்களாய் நான்காஞ் சாமத்திற் சிறிது உறங்கினர்.

### எப்படி உங்கள் சுகம்?

அன்றிரவு அதன்பின் டக்டர் உறங்கினாரோ இல்லையோ நாம் அறியோம்; அடுத்தநாட் காலை 7 மணி வரையில் அவர் மடத்திற்கு வந்தார்; அவரது வரவைக் கண்ட இராமனுஞ் சாமியம்மாளும் அவரை உபசரித்து ஆசனமிட்டு இருக்கச் செய்தனர். நோயாளியின் சுகம் எப்படியென்று டக்டர் வினவ "முதல் முருகன் அருளினாலும் இரண்டாவது உங்கள் புண்ணியத்தினாலும் நோய் படிந்து விட்டது. ஆனாற் பிள்ளை மெலிந்துபோயிருக்கிறாள்" என்று சாமியம்மாள் சொல்லிக்கொண்டு நிற்கும்போது ஆச்சி "அவர்களை உள்ளே அழைத்து வாருங்கள்" என அமிர்தாம்பிகை கதவண்டை வந்துநின்று சொன்னாள்; முந்திய இரவில் அணிந்திருந்தவாறு டக்டர் ஆங்கில உடை அணியாதவராய், வேட்டி உடுத்தி உட்சட்டையும் இட்டுத் தம் தலையையும் உடம்பையும் ஒரு சிவந்த "துப்பட்டியினாற் போர்த்திருந்தார்; அவருடைய நெற்றியில் விபூதி விளங்கியது. அமிர்தாம்பிகை சொன்ன மாத்திரத்தே சாமியம்மாள் பின் செல்ல, அமிர்தம் அவளுக்குப் பின் தொடர்ந்து செல்ல, டக்டர் நோயாளி படுத்துக்கிடக்கும் அறையுட் சென்றார்; அங்கே அவருக்கென ஒரு நாற்காலி முந்தியே இடப்பட்டிருந்தது; "தங்கைச்சி, வைத்தியரையா வருகிறாரம்மா" என்று சாமியம்மாள் சொல்ல, அதனைக் கேட்ட சுந்தராம்பிகை தன் படுக்கையை விட்டு எழுந்திருக்க முயன்றாள்; "இல்லை, இல்லை, நீங்கள் அப்படியே படுத்திருங்கள்; எழும்பவேண்டாம்; உடம்பைச் சிரமப்படுத்த வேண்டாம்" என்று பணிவுடன் சொல்லிக்கொண்டு அந்த நாற்காலியில் உட்கார்ந்தார் வைத்தியர்; சுந்தராம்பிகையின் கைநாடியை அவதானமாகப் பார்த்துவிட்டு, "நோய் படிந்துவிட்டது; இனிப் பயமில்லை; பெலவீனம் அதிகமிருக்கிறது; இனி, இலகுவிற் சீரணிக்கத் தக்கதான ஆகாரம் ஏதும் கொடுக்கலாம்; வேணுமானால் பசுப்பாலும் சேர்த்துக்கொள்ளலாம்; இரவு கொடுத்தமருந்து இனிமேல் வேண்டாம்; நான் வேறு மருந்து தருகிறேன்" என்று சொல்லிச் சில மாத்திரைகளை எடுத்து "நேரம் இரண்டாக இப்பொழுதும் மத்தியானமும் மாலை 6 மணிவேளையிலும் கொடுங்கள்" என்று சொல்லிக் கொடுத்து அதற்குரிய அநுபானத்தையும் வைத்தியர் சாமியம்மாளுக்குத் தெரிவித்தார்; பின்னரும் அவர் நோயாளியை ஆதரவுடன் பார்த்து "உடம்பிற்கு இப்பொழுது எப்படி இருக்கிறது" என்று கேட்டார்.

### "எல்லாம் சுகம்"

"எனக்கு எல்லாம் சுகமாய் விட்டது; தாகமாயிருக்கிறது, பசிக்கவில்லை, உடம்பு மாத்திரம் நகருகிறது" என்று மெல்லச் சுந்தரஞ் சொல்ல "அதையிட்டுப் பயப்பட வேண்டாம், அதிக பெலவீனத்தினாற்றான் அப்படியிருக்கிறது; நீங்கள் இப்பொழுது தேநீர் அருந்தலாம், 10 மணிவரையில் பத்தியமாக ஏதும் உண்ணலாம்; நாளைக்கு உங்களுக்குப் பூரண சுகம் உண்டாகும்" என்று பரிவுடன் டக்டர் பகர்ந்தார். வைத்தியர் தன்னைப் பாராத சமையத்திற் சுந்தராம்பிகை அவரை அவதானமாகப்பார்த்தாள். "சரி, நான் இனி மடத்திற்குப் போய் ஸ்நானாதிகள் முடித்துக்கொண்டு சுவாமிதரிசனஞ் செய்யப் போகவேண்டும்; இன்னும் என்னால் ஆக வேண்டியதற்கு உடனே இராமுவிடஞ் சொல்லியனுப்புங்கள்; ஒன்றற்குங் கவலைப்படவேண்டாம்; எல்லாம் முருகன் செயல், போய்வரலாமா" என்று சொல்லிக் கொண்டு போதற்கு எழுதலும் "ஐயா, தயவு செய்து ஒரு நிமிஷம் இருங்கள்" என்று சொல்லிவிட்டுச் சுந்தராம்பிகை "அக்கா" என்று கூப்பிட "வந்துவிட்டேன், கண்ணே" என்று சொல்லிக் கொண்டு அமிர்தம் சமீபத்தில் வந்து நிற்க, சுந்தராம்பிகை கட்குறிப்பினால் ஏதோ தெரிவிக்க, அமிர்தம் ஒரு புறத்தே இருந்த பெட்டியைத் திறந்து ஏதோ எடுத்துக் கொண்டு வந்து தன் தங்கையின் கையிற் கொடுத்துவிட்டு அயலே ஒதுங்கி நின்றாள். இதற்கிடையிற் சாமியம்மாளும் வந்து பக்கத்தே நின்றாள். "ஐயா, என்னால் எழுந்திருக்க இயலவில்லை, குறைநினையாதீர்கள்; உங்களுக்குத் தக்கைம்மாறு செய்ய எங்களால் முடியாது; நான் தரும் இந்தப் பணத்தைத் தட்சிணையாய் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று படுக்கையிற் கிடந்தபடி இருகரத்தாலும் கொடுக்க டக்டர் கதிரை விட்டெழுந்து இரு கரத்தாலும் ஏற்றுக் கொண்டு பழையபடி உட்கார்ந்தார்; அவருடைய முகம் சடுதியிற் கவலையுடன் காணப்பட்டது; அவர் சிறிது நேரம் ஒன்றும் பேசாது யோசித்தபடி யிருந்தார். அவர் முகக் கோட்டத்தை அமிர்தாம்பிகை அவதானித்தாள். சாமியம்மாளும் அதனைப் பார்த்தாள். இதற்கிடையில் டக்டர் "இந்தப் பணத்தை நான் ஏற்கத்தான் வேண்டுமோ" என்று பெருமூச்சுடன் கேட்க, அமிர்தாம்பிகை "இல்லை, ஐயா, நீங்கள் மனம் வருந்த வேண்டாம்; உங்கள் விருப்பப்படி செய்யுங்கள்" எனலும், அவர் சாமியம்மாளிடம் பணத்தைக் கொடுத்தலும் அவள் வாங்கிக் கொண்டு, "சிறுபிள்ளைப் புத்தியால் இப்பிள்ளைகள் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்றாள். "பிழையொன்றுமில்லை, ஆச்சி, நீங்கள் ஒருநாள் எனக்குச் செய்த நன்றியை மரணபரியந்தம் மறக்கமாட்டேன்.

### "உப்பிட்டவரை உள்ளளவும் நினை"

என்பது பழமொழி; திருவண்ணாமலையிலுள்ள ஒரு மடத்தில் ஒருநாளிரவு நீங்கள் எனக்குச் சிறுண்டி தேநீர் முதலியன வழங்கி என்னை உபசரித்தீர்களல்லவா; அதனை நீங்கள் மறந்தாலும் நான் மறப்பேனா..." என்று சொல்வதற்கிடையில் அவர்கள் மூவரும் பிரமிப்படைந்தார்கள். "தம்பி, உம்முடைய பெயரை நாங்கள் அறியவொண்ணுதா" என்று சாமியம்மாள் கேட்க "என்னைச் சுந்தரராசன் என்று சொல்லுவார்கள்" என டக்டர் சொன்னார். கேட்ட மாத்திரத்தே சுந்தராம்பிகை நாணமுற்றாள்; அவளுடைய முகமும் மேனியும் வியர்வையுற்றன; விழிகள் பாதிப்பார்வையுடன் காணப்பட்டன; மெல்ல மறுபுறமாகப் புரண்டு படுத்தாள்; மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு என்னுங் குணங்கள் அவளைச் சூழ்ந்தன; அமிர்தாம்பிகை அற்புதமடைந்தாள்; சாமியம்மாள் ஆச்சரியத்துடன் நின்றாள்; "நான் போய் வருகிறேன்" என்றார் டக்டர். (வரும்)

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோடு வழக்கு 1

# முதலாவது அல்லைப்பிட்டிக் கொலை வழக்கு

## எதிரிக்கு மூன்றரை வருடக் கடூழியம்

6-10-41

இன்று யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோடு ஆரம்பமாயிற்று. நீதியரசர் மிஸ்றர். சூட்டன் கோட்டுக்கு வந்ததும், அவருக்குரிய சங்கையைப் பொலிஸ் சுப்பிறிண்டெண்டன் மிஸ்றர். S. de. சொய்சாவும் மற்றையோருஞ் செய்தனர். பின்னர் மாகாணத்தலைவர் மிஸ்றர். M. பிரசாத் அவர்கள் மந்தாசை நீதியரசரிடம் ஒப்புவித்தார். இதன் பின்னர் இம்முறைக்குள்ள பதின்மூன்று வழக்குகளிலும் கொலைவழக்குகளிலுள்ள எதிரிகள் தங்கட்கு நியாயவாதி ஏற்படுத்தாத வழக்குகளுக்கு நியாயவாதிகள் நியமிக்கப்பட்டனர்.

முதல்வழக்காக ஊர்காவற்றுறை டிஸ்திறிக்கைச்சேர்ந்த அல்லைப்பிட்டியில்வசிக்கும் ஏரம்பு-அருணாசலம் சென்ற 1940 ம் ஆ டிசம்பர் மீ 10-ந் திகதி பிற்பகல் 5 அல்லது 5-30 மணியளவில் அவ்வூர் இளையதம்பி-கணபதிப்பிள்ளையைக் கத்தியாற்குத்திக் கொலைசெய்யஎத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

ஜூரித்தலைவராக மிஸ்றர். V. வீரசிங்கம் அவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டார். எதிரி தனக்காகத் தாமே வாதித்தார். முடிக்குரிய நியாயவாதி திரு. மிஸ்றர். H. W. R. வீரசூரிய ஜூரிக்கனவான்களுக்கு வழக்கின் சாரத்தை எடுத்துக்கூறினார்.

காயக்காரனாகிய இளையதம்பி-கணபதிப்பிள்ளை கூறியவற்றின் சாரமாவது:-

எனக்கு எதிரியைத்தெரியும். அவர் என்னுடைய வீட்டிற்கு ஒரு கூப்பிடுதூரத்தில் வசிக்கிறார். அவர் விவாகஞ்செய்யவில்லை. நான் இராசம்மாவை விவாகஞ்செய்திருக்கிறேன். இராசம்மாவுக்கு இப்போ 18 வயது. எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். மூத்தது ஆண், இளையது பெண், மூத்த பிள்ளையின்பெயர் பேரின்பநாயகம். இளையபிள்ளையின்பெயர் லெக்ஷிமி. மூத்தபிள்ளைக்கு ஏழுவயது. இளையபிள்ளைக்கு இரண்டுவயது. நானும் மனைவியும் ஒற்றுமையாகச் சீவித்து வந்தோம். இச்சம்பவத்திற்குப் பத்துநாளைக்கு முன்னர் நான் ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்காகச் சென்றிருந்தேன். நான் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்குத் திரும்பிவந்தபோது என்னுடைய மனைவிமக்கள் வீட்டிலிருந்தனர். இதன்பின்னர் எதிரி என்னுடைய வீட்டிற்குவந்து போய்க்கொண்டிருந்தார். நான் ஆஸ்பத்திரியிலிருந்து வந்து ஆறாம் நாளில் என்னுடைய மனைவிமக்கள் வீட்டிற்காணப்படவில்லை, என்னுடைய மனைவி எதிரியோடு கூடிச்சென்றுவிட்டதாக அறிந்தேன்.

எதிரி இதற்குமுன்னர் என்னுடையவீட்டிற்கு வந்து போகும் வழக்கம் இருந்திருக்கவில்லை. நான் என்னுடையமனைவி பிள்ளைகளோடு எதிரியுடன் கூடிக்கொண்டு களவாகச்சென்றதை அவ்வூர் விதானையாருக்கு அறிவித்தேன். விதானையார் இடத்திற்குவந்து விசாரித்தபின்னர் என்னுடைய ஆண்குழந்தையை என்னிடத்திலும் பெண்குழந்தையைத் தாயாரிடத்திலும் விட்டார். என்னுடையமனைவி என்னுடனே வர மறுத்து எதிரியோடு இருக்க நம்பினள்.

இச்சம்பவத்திற்கு அடுத்தநாள் நான் என்னுடைய மகனுக்குப் பேன்பார்த்துக் கொண்டிருந்தபோது எனக்குப்பக்கத்தில் ஒரு கல்லு வந்து விழுந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். அப்போது எதிரி அங்கே நின்றான். எதிரி தனது இடுப்புக்குள்ளிருந்து ஒருகத்தியை எடுத்து விரித்துக்கொண்டு வந்தான். நான் அவ்விடத்தைவிட்டு ஓடினேன். எதிரி என்னைத் துரத்திக்கொண்டுவந்து கத்தியால் பின்புறத்தோள்மூட்டில் எனக்குக்குத்தினான். நான்நிலத்தில் விழுந்துவிட்டேன். எதிரியை எதிரியின் பெற்றோர்கள் அங்குவந்து கூட்டிச்சென்றுவிட்டார்கள். எனக்கு அறிவுமயங்கிவிட்டது. பின்னர் விதானையார் அங்குவந்தார், என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார். விதானையாருக்கு எதிரி தான் எனக்குக் குத்தினதாகக் கூறினேன். நான்நீதிபதிக்கும் என்னுடைய வாய்முறைப்பாட்டைக் கூறினேன். எதிரி எனக்குக் குத்தின்போது உனக்கென்னடா நாட்டாண்மை என்றுசொல்லிக் குத்தினான்.

இதன்பின்னர் டாக்குத்தர் மிஸ்றர். A. S. நன்ற் சின்னப்பு-முத்துவேலு, ஏரம்பு-அருளம்பலம், முதலியவர்கள் சாக்ஷியங்கூறினர்.

பின்னர் எதிரி சாக்ஷியங் கூறினர்.

எதிரி தான்கத்தியாற் குத்தவில்லையென்றும் கல்லால் எறிந்ததாயும் அக்காயம் கல்லாலேறிந்த காயமென்றும், காயக்காரனே தன்னை அவருடைய வீட்டிற்கு வந்துபோகும்படி கேட்டதாயும் உண்மையில் தனக்கும் காயக்காரனின் மனைவிக்கும் ஒரு சம்பந்தமுமிருக்கவில்லையென்றும் காயக்காரன் அவள்மீது ஐயுறவுகொண்டு அவளையடித்து ஆக்கினை செய்தபடியால் அவள் தாமாகவே தம்மிடம்வந்ததாயும் இப்போது அவள் தம்மோடுதான் இருப்பதாயும் தாங்களிருவரும் கணவனும் மனைவியுமாக இதன்பின்னர் இருந்து வந்ததாயும் கூறினார்.

எதிரிக்காக S. நல்லையாவும் S. சுப்பிரமணியமும் சாக்ஷியங் கூறினர்.

விசாரணை முடிவில் ஜூரிமாரில் ஆறுபேர் எதிரியைக் கைபிழைபாடாய்க் கொலைசெய்ய எத்தனித்ததாக குற்றஞ்சாட்டிக் குற்றமாய்க் காண்பதாய் அபிப்பிராயந் தெரிவித்தனர். நீதியரசர் எதிரிக்கு மூன்றரைவருடக் கடூழியமறியற்றண்டனை விதித்தார்.

## சங்கானைக் கொலையெத்தன வழக்கு

8-10-41

சங்கானை ஒழக்கில் வசிக்கும் சரவணமுத்து-சோமசுந்தரம் சென்ற 1941ம் ஆண்டு ஜனவரி மீ 4-ந் திகதி அவ்வூர் இராமலிங்கம் ஐயாத்துரையைக் கத்தியால்வெட்டியும் அலவாங்கால் அடித்தும் கொலை செய்ய எத்தனித்ததாகக் குற்றஞ் சாட்டிய வழக்கு மூன்றாவது வழக்காகச் சுப்பிறீம்கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

# அரிவாளால் வெட்டிக் கொலை

## சரசாலையில் நடந்த சம்பவம்
## எதிரிக்கு ஏழு வருஷக் கடூழியம்

யாழ்ப்பாணம், 7-10-41

சாவகச்சேரி டிஸ்திறிக்கைச் சேர்ந்த சரசாலை யென்னுமிடத்தில் வசிக்கும் சின்னத்தம்பி-கந்தையா சென்ற 1941-ம் ஆண்டு பெப்ரவரி மாசம் 19ந் திகதி காலை 10 மணியளவில் தன்னுடைய ஒன்றைவிட்ட சகோதரன் முறையான வீரகத்தி-கந்தையாவை நெல் அறுக்கும் அரிவாள் ஒன்றால் வெட்டிக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்குச் சுப்பிறீம் கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிரிக்காக நியாயவாதி மிஸ்றர் W. A. வால்டன் மிஸ்றர் K. தம்பிப்பிள்ளையின் உதவியைக் கொண்டு வாதித்தார்.

இறந்தவரோடும் எதிரியோடும் வயலிற் கூடநின்று வேலைசெய்த கணபதிப்பிள்ளை-கந்தையா கூறியதாவது:-

எனக்கு எதிரியையும் இறந்தவரையுந்தெரியும். அவர்கள் எனக்குச் சொந்தமானவர்களல்லர். இறந்தவர் எதிரியின் ஒன்றைவிட்ட சகோதரன். இச் சம்பவத்தன்று அவர்கள் இருவரும் என்னுடைய மாமனாரின் நெல்லை வெட்டவந்தனர். இவர்கள் இருவரையும் விட வேறு பேருக்கும் அன்று சொல்லி வைக்கப்பட்டது. ஆனால், மற்றவர்கள் வரவில்லை. நானும் அவர்கள் இருவருமாக ஒரு பகுதியை வெட்டினோம். நான் வயலுக்குப் போகு முன்னர், எதிரியும் இறந்தவருஞ் சென்று நெல்லை வெட்டினர். நான் காலை 9 மணியளவிற்றான் வயலுக்குச் சென்றேன். நான் போகும்போது, அவர்கள் இருவரும் கதை வழிப்பட்டனர். அவர்கள் கதைவழிப்பட்டதிலிருந்து நான் அறிந்தது என்னவென்றால் "எதிரியின் தகப்பனார் இறந்தவருக்குத் தனது மகன் தன்னையும் மனைவியாரையும் அடிக்கச் சென்றதாகக் கூறினதாக இறந்தவன் எதிரிக்குக்கூற எதிரி தனக்கும் தன்னுடைய பெற்றோருக்குமிடையே பகையை யுண்டாக்கப் பார்க்கிறாய்' என்று கூறினர். இவர்கள் இருவரும் வாக்குவாதப் பட்டபின்னர், ஒருவரையொருவர் தள்ளுப்பட்டனர். நான் அவர்கள் இருவருக்குஞ் சமாதானம் கூறி நெல்லை வெட்டச் சொன்னேன். அப்போது அவர்கள் இருவரும் அரிவாள் கையில் வைத்திருந்தனர். பின்னரும் அவர்கள் வேலை செய்தபோது ஒருவரை யொருவர் வைதனர். திரும்பவும் அவர்கள் வாக்குவாதப்பட்டது மூர்த்திப் பேசின விஷயத்திற்றான். இறந்தவர் எதிரி இருந்த இடத்திற்குச் சென்று இரு கைகளாலும் எதிரியைத் தள்ளினர். இப்படித் தள்ளிய பின்னர்த் தான் இருந்த இடத்திற்கு இறந்தவர் சென்று திரும்பவும் நெல்லை வெட்டினர். அப்போது எதிரி இறந்தவர் இருந்த இடத்திற்குச் சென்று (இருவரும் மிக்க அருகாமையில் இருந்திருக்கிறார்கள்) முதன்முறை முதுகில் வெட்டினர். இறந்தவர் நிலத்தில் விழுந்துவிடத் திரும்பவும் மூன்று நாலு முறை வெட்டினர். இறந்தவர் எதிரிக்குக் கையால் அடிக்கவில்லை. நான் சத்தமிட்டேன். என்னுடைய சத்தத்திற்கு முருகர்-சரவணையும் சின்னப்பா-பொன்னையாவும் அங்கு வந்தனர். எதிரி அரிவாளையும் கொண்டு தன்னுடைய வீட்டுப் பக்கமாக ஓடிவிட்டார். நான் இறந்தவரின் சொந்தக்காரருக்கு இதைப்பற்றி அறிவிக்க எதிரியின் பின்னால் ஓடினேன். நான் சின்னத்தம்பியாகிய சொந்தக்காரனிடம் இதனை அறிவித்தேன். எதிரி தன்னுடைய வீட்டிற்குச் சென்று அரிவாளை வைத்துவிட்டு ஒரு கல்லைக் கையில் எடுத்துக் கொண்டு திரும்பி வந்தார். நானும் பொன்னம்பலம் என்பவருமாக எதிரியைப் பிடித்தோம். எதிரியைப் பொன்னம்பலத்திடம் ஒப்புவித்து விட்டு நான் புல்லுவெட்டச் சென்றேன். பின்னர் புல்லுவெட்டியதும் திரும்பி வந்தபோது காயக்காரனை ஆஸ்பத்திரிக்குப் பொலிசார் கொண்டு சென்றனர். நானும் அவர்களோடு சென்று எனது வாய்முறைப்பாட்டைப் பொலிசாருக்குக் கூறினேன். காயக்காரன் ஆஸ்பத்திரியில் இறந்துவிட்டார்.

வழக்காளி பக்கத்துக்குரிய மற்றைய சாக்ஷிகளாகிய சின்னப்பு-பொன்னையா, முருகர்-சரவணை, விதானையார் சரவணமுத்து—வைக

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# ஹிட்லர் பெரிய வெற்றியை அடைய விரும்புகிருர்

## மாரிக் காலத்திற்குமுன் இதை அடைய அவரது முயற்சி

மொஸ்கோ அக் 7

மத்தியருஷிய யுத்த களத்தில் ஜெர்மனியரின் தாக்குதலை யெதிர்த்து நிற்கக்கூடியதாகச் சோவியத் படைகளைத் தும் திரட்டப்பட்டு விட்டன என்று M. லொசோவ்ஸ்கி என்பார் இன்று தெரிவித்தார்.

ஜெர்மனியர் பிரகடனஞ் செய்த புதிய தாக்குதல் இனித்தான் நிகழுமோ அல்லது இதுவரையில் ஆரம்பித்து விட்டதோ என்று கேட்கப் பட்டபோது "அஃது ஆரம்பிக்கின்றது. தாம் யுத்தத்தில் இறப்பதற்கென அனுப்பக்கூடிய தொகையிலும் மேலதிகமாக ஒரு சில லக்ஷம் பேரை ஜெர்மனியர் அனுப்ப முடியுமானுற்ருன், அவர்கள் இத் தாக்குதலிற் சித்தியடைவார்கள்" என்று M. லொசோவ்ஸ்கி பதிலளித்தார். மேலும் அவர் கூறியதாவது:—

"உண்மையான மாரிக்காலம் வருவதற்கிடையில் பெரியவெற்றியை யடைந்துவிடவேண்டுமென்பது ஹிட்லரின் விருப் ம். புதிய நகரங்களைக் கைப்பற்றுவது வெற்றிகரமான முடிவைத் தருவதற்கு உதவியாக மாட்டாதென்பதை அநுபவமே காட்டுகின்றது. ஜெர்மானியர் இதுபற்றிப் பெரிய கவலையடைந்திருக்கின்றனர். இந்தச் சிக்கலான நிலைமையைத் தீர்க்க வழியின்றி அவர்கள் திகைக்கின்றனர். ஒரு நிலைமையில் யுத்தத்தை நிறுத்தி மாரிக்காலம் முடியும்வரை ஜெர்மானியரைத் திருப்திப்படுத்தவதே ஹிட்லரின் நோக்கமாகும்."

## ஹிட்லர் கூறிய ஓர் உண்மை

### ஜெர்மன் ஆட்சிக்குப் பேரவமானம்

லண்டன், அக் 5

ஹெர் ஹிட்லரின் பேச்சுப் பற்றி இராணுவ விமர்சகர் "அனலிஸ்ட்" எழுதுவதாவது:-

வெள்ளிக்கிழமை ஹெர் ஹிட்லர் விடுத்த அறிக்கையில் அரைகுறையான விஷயங்கள் மலிந்து காணப்படுகின்றன. இருந்தாலும் அவர் கூறிய ஒருவிஷயம் மாத்திரம் கலப்பற்ற உண்மையாக விளங்குகிறது. "முதலில் மௌனமாக இருந்தபின், ருஷியாவைத் தாக்குவதென்று தீர்மானித்தேன். என்னுடைய சீவிய காலத்திலேயே அதுதான் மிகுந்த மனவேதனையுடன் செய்த தீர்மானமாகும்" என்று ஹிட்லர் கூறியிருப்பதைத் தருவி ஆராயப்புகின், தனது திட்டங்கள் போலி வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்டவை என்பதாக அவர் ஒப்புக்கொள்வதைக் காணலாம். சத்துரு இவ்வளவு பிரமாதமான ஆபத்துக்களைச் செய்திருப்பானென்ருே அல்லது சத்துருவிடமிருந்து ஏற்படக்கூடிய ஆபத்து இவ்வளவு பிரமாதமானதாக இருக்குமென்ருே நாங்கள் எதிர்பார்க்கவில்லை" என்று ஹிட்லர் கூறுகிருர். இதிலிருந்து ஹிட்லரின் மனத்திலுள்ள எண்ணத்தைக் கண்டறிந்துகொள்ளமுடியும். இந்தக் கஷ்டங்களை ஏற்கெனவே அறிந்திருந்தால், ருஷியாவைச் சிறிது முன்னதாகவே தாக்கியிருக்கலாம். அல்லது தாக்காமலே இருந்திருக்கலாம் என்று அவர் எண்ணுவதாகத் தோன்றுகிறது.

#### ஹிட்லர் ஏமாற்றப்பட்டார்

ருஷியாவின் உண்மைப் பலத்தை உணர்ந்து கொள்வதில் ஹிட்லர் பூரணமாக ஏமாற்றப்பட்டுவிட்டார். அவர் தமது பேச்சில் சோவியத் ருஷியாவில வேலைசெய்த தமது உளவாளிகள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யத் தவறிவிட்டதாக நினைத்து வெறுப்படைகின்ருர். துரிதவெற்றியை எதிர்பார்த்துத் தோல்வியடைந்தார். ஹிட்லர் வெளியிட்டஉண்மை ருஷியர்களைப் பெருமைப்படுத்துகிறது. அதே நேரத்தில் ஜெர்மன் ஆட்சிக்கு அவமானத்தை விளைவிப்பதாக இருக்கிறது.

## கொன்ஸ்டபிளைத் தாக்கியதாக வழக்கு

### எதிரிகள் மூவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது

தங்காலை, அக் 4

சென்ற மேமாசம் 13ம் திகதி திஹிலுவவயில் டி. எம். டானியல் என்னும் ஒரு கொன்ஸ்டபிளைத் தாக்கியதாக லவ. நெ ந்ஸ் பி. வியாதரிஸ் டி. நிலாநாயகா என்னும் மூவர்மீது குற்றஞ் சாட்டப்பட்ட வழக்குத் தங்காலை நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

பொலிஸ் தொப்பியையும் பித்தளையாலான பொலிஸ் சின்னத்தையும் களவாடியதாக மூன்ருவது எதிரி மேலுங் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிருர்.

கொன்ஸ்டபிள் டேனியல் சாக்ஷியம் கூறும்போது பின்வருமாறு தெரிவித்தார்:-

"நான் பாவித் காவல் புரியும் பொழுது, குடித்தவர்கள் போற் காணப்பட்ட மூன்று எதிரிகளும் என் அருகில் வந்து என்னை நிந்தித்தனர். இரண்டாவது எதிரி வைத்திருந்த ஒரு கத்தியை நான் பறிக்க முயன்றபொழுது முதலாம் எதிரி ஒரு குண்டாந் தடியால் என் முதுகில் அடித்தார். நான் கீழே விழுந்தவுடன் இரண்டாம் எதிரி குண்டாந்தடியால் என் நெற்றியில அடித்தார். மூன்ருவது எதிரி என்னுடைய தொப்பியையும் பொலிஸ் சின்னத்தையும் பறித்துக்கொண்டார். பின்னர் எல்லோரும் ஓடிப் போய் விட்டனர்.

நீதிபதி 1-வது 2-வது எதிரிகளுக்குத் தனித்தனி ரூபாய் 100-ம் மூன்ருவது எதிரிக்கு ரூபாய் 125ம் அபராதம் விதித்தார்.

## றீகல் பேசும் படமாளிகை

இப் படமாளிகையிற் சென்ற சனிக்கிழமை தொடக்கம் பாலசுந்திரன், ஆர். ரஞ்சன் பி. ஏ, ஜி பட்டு ஐயர், ஸ்ரீமதி. வசுந்தரா, குமாரி முராளி, குமாரி ருக்மணிமுதலியோர்

## உயர்வில்லாத குறிப்பிட்ட சம்பளம்

### தற்காலிக ஆசிரியர்களின் அதிருப்தி

தற்காலிகமாக அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களும் தற்காலிகமாகப் பதிவு செய்யப்பட்ட ஆசிரியர்களும் உபாத்தியாயர் தொழிலில் தாம் அடையக்கூடிய முன்னேற்றம் சம்பந்தமாகக் கல்வி மந்திரியிடம் விண்ணப்பித்திருக்கின்றனர் என்று அறியப்படுகிறது. இத்தகைய ஆசிரியர்கள் ஏறக்குறைய 300 பேர் இலங்கையில் இருக்கின்றனர்.

இந்த இனத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு மாதமொன்றுக்குரூபாய் 60 சம்பளம் வழங்கப்படுகிறது. உசிவ ரோசக்யதாம்சங்களைப் பெறுவதும். வழக்கமாக ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் விகிதப்படி அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்படாத ஆசிரியர்களின் சம்பளம், 40 ரூபாவிலிருந்து ஆரம்பித்து 75 ரூபாவ்வரை உயருகிறது.

தற்காலிகமாக அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்கள், தாங்களும் இச்சம்பளத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டு ஆகக் கூடுதலான சம்பளம், ரூபாய் 75 தங்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்கின்றனர்.

இந்த ஆசிரியர்கள் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படாத ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்திட்டத்தைப் புறக்கணித்த ஒரு குறிப்பிட்ட திட்டமான சம்பளம் வழங்கப்படுவதையே விரும்பினுர்களென்று சொல்லப்படுகிறது.

நடித்த "ரிஷ்யசிருங்கர்" என்னும் இனிய தமிழ்ப்பேசும்படம் காட்டப்பெற்று வருகின்றது. இப்படத்தில் தந்தையாகிய விபாண்டகரால், உலகமே இன்னதென்று தெரியாமல் ஏகாந்தத்தில் வளர்க்கப்பட்ட "ரிஷ்யசிருங்கர்" நாராயணஸ்மரணை செய்து கொண்டு தவஞ் செய்வதும், அவரதுஉள்ளங்காலில "கேஷமசக்கரம்" இருந்த காரணத்தால் அவரைத் தன் நாட்டுக்குக் கொணர்வதால், பஞ்சமுற்றிருக்கும் தன் நாடு மழைவளம் பெற்றுச் செழிப்புறும் என்று கருதிய அரசனுல அனுப்பப்பெற்ற மாயா என்ற அரண்மனைத் தாசிப் பெண்ணினதும் மற்றுஞ் சில பெண்களினதும் விலாசிநேத வலையில் அவர் மெல்ல மெல்லச் சிக்கிக் கொள்வதும் அவர்களால் வசீகரிக்கப்பட்டுக் குறித்த நாட்டுக்குச் செல்வதும் அங்கு அரசன்மகளை மணந்து கொள்வதும் பிறவும் பார்த்து மகிழத்தக்கனவாகும். இப்படத்தில் பாட்டு, நடிப்பு, பரதநாட்டியம் முதலிய யாவும் நன்கு அமைந்திருக்கின்றன. தனியான ஹாஸ்யம் தேவைப்படாமலே பார்ப்போருக்கு நகைப்பை விளைக்கத்தக்க பகுதிகள் கதையிலேயே அமைந்திருத்தலைக் காணலாம். சிறப்பாக ஸ்ரீமதி வசுந்தராவின் நடிப்பும் பரதநாட்டியமும் ரிஷ்யசிருங்கராக நடிப்போரின் நடிப்புத்திறனும் பாட்டுத்திறனும் பாராட்டத்தக்கன. இன்னும் பார்த்து மகிழக்கூடிய பல அம்சங்கள் இப்படத்தில் உண்டு. தமிழில் நகைக்கோட்டு முனிவர் என அழைக்கப்படுவோர் இந்த ரிஷ்யசிருங்கரே யாவர் போலும்!

## பம்பாயில் அரிசி வியாபாரிகளின் மகாநாடு

### இலங்கையிலிருந்தும் இறக்குமதியாளர்செல்வர்?

### பர்மா அரசாங்கத்திட்டத்தின் விளைவு

பர்மாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் அரிசி சம்பந்தமாகப் பர்மா அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைபற்றி ஆலோசிப்பதற்காகக் கூடிய விரைவில் பம்பாயில நடைபெற இருக்கும் மகாநாட்டுக்குக் கொழும்பிலுள்ள இந்திய அரிசி இறக்குமதியாளர்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருக்கின்றன ரென்று அறியப்படுகிறது.

அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து அரிசி ஏற்றுமதி செய்யும் ஏகபோக உரிமையைத் தாங்களே ஏற்றுக் கொள்ளப் பர்மா அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதனுல், பர்மாவிலிருந்து இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்குஞ் செல்லும் அரிசி ஏற்றுமதி பாதிக்கப்படுகிறது.

#### தொழில் மந்திரிசபைக்கு விபரமான தகவல்கள்

இது விஷயம் பற்றிய விபரமான தகவல்களைத் தெரிவிக்கும்படி தொழில் வர்த்தக மந்திரிசபை பர்மா அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாக அறியப்படுகிறது. அத்தகவல்கள் கிடைத்ததும் பர்மா அதிகாரிகளின் நடவடிக்கைக்கு அவசியமான ஏற்பாடுகளைச் செய்வதற்குத் தொழில் மந்திரிசபை உத்தேசித்திருக்கிறது.

இதற்கிடையில் நங்கூனிற் பிரதிநிதிகளை வைத்திருக்கும் இந்திய வர்த்தக ஸ்தாபனங்கள் பர்மா அரசாங்க அரிசி ஏற்றுமதி சம்பந்தமாக அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரத் தீர்மானித்திருக்கும் நடவடிக்கைகளை ஆக்ஷேபித்துக் கிளர்ச்சி செய்கின்றன. இந்த நெருக்கடியான நிலைமையைச் சமாளிப்பதற்கு எவ்வித நடவடிக்கை எடுத்துக் கொள்வதென்பதைத் தீர்மானிப்பதற்காகப் பம்பாயில் ஒரு மகாநாடு நடத்த அவர்கள் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

இலங்கையிலுள்ள இந்திய அரிசி இறக்குமதியாளர்கள் இந்தியாவிலுள்ள அரிசி இறக்குமதியாளர்களைப் போலவே பர்மாவில் அரிசி வாங்குகின்றனர். ஆகவே அவர்களும் அதே போலப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

#### அரிசி ஏற்றுமதியாளரை வெளியேற்றுவதற்கா?

இப்போது பர்மாவிலுள்ள அரிசி ஏற்றுமதியாளர்களைத் தொழிலிலிருந்து வெளியேற்றுவதற்காகவே பர்மா அரசாங்கம் இப்புதிய ஏற்றுமதித் திட்டத்தை அநுஷ்டிக்க உத்தேசித்திருப்பதாக இந்தியர்களிற் சில பிரிவினர் அபிப்பிராயப்படுகின்றனர். ஆயின், நங்கூனிலிருந்து கொழும்புக்குக் கிடைத்திருக்கும் செய்தியிலிருந்து பர்மா அரசாங்கத்தின் உத்தேசம் அதுவல்ல வென்றும் யுத்தம் முடிந்தபின்னர் ஏற்படக்கூடிய நிலைமையைச் சமாளிப்பதற்காகவே இந்த முறை கையாளப்பட இருப்பதாயுந் தெரிகிறது.

சமீபகாலம்வரை சில அந்நிய நாடுகள் பர்மாவிடமிருந்து ஏராளமான அரிசியை வாங்கின வென்றும், யுத்தம் முடிந்ததும் மீளவும் அதேமாதிரி நடைபெறக் கூடுமென்றும் சொல்லப்படுகிறது. யுத்தம் முடிந்ததும், நங்கூன் அரிசி 'மார்க்கெற்'றில் அந்நிய நாடுகள் அதிகமாக அரிசியை வாங்குவதால், அரிசிக் கஷ்டம் ஏற்பட்டு விடாமல் தடுப்பதற்கே பர்மா அரசாங்கத்தார் இந்த ஏற்பாட்டைச் செய்கின்றன ரென்று சொல்லப்படுகின்றது.

## மத்தியமாகாண சைவமகாசபை கண்டி

நிகழும் விஷு ஆண்டு புரட்டாதித் திங்கள் பதின்மூன்ரும் ஞாயிறு (29. 9. 41) திங்கட்கிழமை பிற்பகல் 6 மணியளவில் சபைப் புதுமண்டபத்தில் சபையின் ஆதரவில் சரஸ்வதி பூசை வெகு சிறப்பாக நடாத்தப் பெற்றது. சைவ அன்பர்கள் ஏராளமாகச் சமுகமளித்தனர். பால்பழபலகாரா அன்னபாநாதிகள் நிவேதிக்கப் பெற்று அன்பர் அனைவருக்கும் இனிது வழங்கப் பெற்றன.

சரஸ்வதி பூசையின் பின் சபையின் சிறப்புக் கூட்டமொன்று சபாநாயகர் இராசவாசல் முகாந்திரம் கா. கனகசபை அவர்கள் தலைமையில் நடந்தது. I சபைக் கட்டிடத்தை நிறைவேற்ற மேலும் ஆயிரம் ரூபா கடன் எடுத்துப் பின் அதைக் கூடியசீக்கிரத்தில் தீர்த்து விடல். II குறித்த பணத்தை விரைவில் திருப்பிக் கொடுக்க முடியாது போனல் ஒடுவைக்கும்போது இத்தொகையுஞ் சேர்த்துக் கடனெடுத்தல். III கட்டடம் நிறைவான பின் அதனை ஈடுவைத்து ஏலவே கடனெடுத்த பணத்தையும் இப்போது எடுக்க இருக்கும் ஆயிரம் ரூபாவையும் அவைக்குரிய வட்டியையுந் திருப்பிக் கொடுத்தல் என்னும் மூன்று விஷயங்களும் சபையில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பெற்றன. சபைக் கட்டிடமேன் மாடியைக் கூடியவரையில் தெண்டித்து சபையின் அங்கத்தவர்களுக்கே விடுதிக்குக் கொடுக்க வேண்டுமென்றும் அவ்வாறு முடியாவிடில் மறுபேருக்குக் கொடுப்பது என்றும் விஷயம் தீர்மானிக்கப் பெற்றது. இதற்காகிய சகல முயற்சிகளையும் செய்யுமாறு நிர்வாகசபைக்கு முழுஅதிகாரமும் அளிக்கப் பெற்றது. இவ்விஷயம் பற்றிக்காரியதரிசிதிருவாளர் சி. கந்தையா அவர்கள் சில குறிப்புகள் கூறியுள்ளார். சபைக்கட்டட நிதிக்கு ரூபா 250 அதற்கு மேலுமாக நன்கொடை உதவிய பெரியார்களின் பெயர்களை அவரின் சம்மதத்துடன் தொகை முறையில்அகரவரிசையாகப் பித்தளைத் தகட்டில் செதுக்கிப் பதித்தல் என்னும் பிரேரணை திருவாளர் ஆ. நவரத்தினராசா அவர்களால் பிரேரிக்கப் பெற்றது. திருவாளர் P. பாலசிங்கம் அவர்களால் ஆமோதிக்கப் பெற்று சபையினரால் ஏகமனதுடன் அங்கீகரிக்கப்பெற்றது.

மேலும் இன்று அங்கத்தவராயுள்ளார் ஒருவர் கட்டட நிதிக்கு ரூபா மூவாயிரத்துக்கு குறையாது நன்கொடை யளித்தாலும் அங்கத்தவரின்றி வசவசமயியாயுள்ள ஒருவர் ரூபா ஐயாயிரத்துக்குக் குறையாத ஓர் நன்கொடையை யளித்தாலும் அவர் பெயரினுலோ அன்றி அவரால் குறிப்பிடப்பெறும் ஓர் சைவப் பெரியார் பெயரினுலோ மேற்படி சபை நிர்வாகசபையினரின் அங்கீகாரத்துடன் கீழ் மண்டபம் பெயர் வழங்கல் என்ற பிரேரணை திருவாளர் ஆ. நவரத்தினராசா அவர்களால் பிரேரிக்கப் பெற்று திருவாளர் P. பாலசிங்கம் அவர்களால் ஆமோதிக்கப் பெற்று சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பெற்றது. 9 மணியளவில் தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவு எய்தியது.

கடித

## தண்டனை முடியுமுன் ராஜாஜி விடுதலை

திருச்சிருப்பள்ளி, அக் 5—

சென்னைப் பழைய பிரதம மந்திரி ஸ்ரீமான். ஸி. இராஜகோபாலாச்சாரியார் நாளைக்காலை திருச்சி சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு விடுவாரென்று இங்கு செய்தி கிடைத்திருக்கிறது. அவரோடு பழைய மந்திரிகள் ஸ்ரீ. டி. பிரகாசமும், ஸ்ரீ கோபாலரெட்டியும் விடுதலை பெறுவார்களென்றும் அச் செய்தி கூறுகின்றது.

ஸ்ரீமான். இராஜகோபாலாச்சாரியார் இம்மாதம் 16-ந்திகதி யன்றுதான் அவருடைய தண்டனை பூர்த்தியாகி விடுதலை பெற வேண்டும். ஆயின், அவருடைய தண்டனைக் காலம் குறைக்கப்பட்டு அவர் நாளை விடுதலை யடையப் போவதாகத் தெரியவருகிறது.

# இந்தியச் செய்திகள்

## வந்தே மாதர கீதத்துக்கு மரியாதை

ஜபல்பூர் அக் 3—

பொதுக்கூட்டங்களுக்குப் போகும் அரசாங்க உத்தியோகஸ்தவர்கள் வந்தேமாதரகீதம் பாடப்பட்ட போது மரியாதைக்காக எழுந்துநிற்க வேண்டுமென மத்தியமாகாண அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது.

## இந்தியத் துருப்புகளுக்கு மன்னரின் பாராட்டு

சிம்லா அக் 5—

இந்திய சேனாதிபதியான ஜெனரல் வேவல் எகிப்து வழியாகச் சமீபத்திற் செல்லும்போது மத்திய கிழக்கிற் சேவைபுரியும் இந்திய துருப்புகளுக்குக் கீழ்க்காணுஞ் செய்தியை விடுத்தார்:—

"நான் இங்கிலாந்தில் இருந்தபோது, மன்னர்பிரான் எனக்குப் பேட்டி யளித்தார். அப்போது சமீபத்தில் நடைபெற்ற யுத்த நடவடிக்கைகளில் இந்தியத் துருப்புகள் காட்டிய வீரத்தைக் கண்டு தாம் மிகவும் திருப்தியடைந்ததாக அவர் மகிழ்ச்சியோடு தெரிவித்தார். இங்கிலாந்து முழுவதும் சனங்கள் இந்தியத் துருப்புகளைப் பெரிதும் போற்றுகின்றனர். உங்களுக்கு வெற்றியும் நல்லதிர்ஷ்டமும் ஏற்படவேண்டுமென நான் பிரார்த்திக்கிறேன். நீங்கள் ஈட்டிய புகழைக் காப்பாற்றுவதோடு அதை மேன்மேலும் விருத்திசெய்வீர்கள் என்பதை நான் அறிவேன்.

## காங்கிரஸிடமே பூரண நம்பிக்கை

ஆமதாபாத், அக் 5—

கூர்ஜர வித்யாபீட மாணவர்களுக்குக் காங்கிரஸ் பொதுக்காரியதரிசி ஆசார்ய கிருபாளினி ஒரு பிரசங்கம் செய்கையில குறிப்பிட்டதாவது:-

காங்கிரஸ்தான் இந்நாட்டில் தேசிய ஸ்தாபனமாக இருக்கிறது. ஜாதிமத பேதமின்றி அந்த ஸ்தாபனம் தான் எல்லா இந்தியருக்கும் இடம் கொடுக்கிறது.

ஹிந்துமகாசபை, முஸ்லிம் லீக் முதலிய வகுப்பு ஸ்தாபனங்கள் அந்தந்த வகுப்பினரின் நன்மையையும் நாடவில்லை. தேசமே கஷ்டத்திலிருக்கையில் அதிலடங்கிய வகுப்புக்கள் எவ்விதம் விருத்தியடைய முடியும்! வங்காளத்தில் மந்திரிசபை அமைப்பு விஷயத்தில், ஹிந்து மஹாசபையும் முஸ்லிம் லீகும் ஒன்று சேர்ந்து கொண்டது. முஸ்லிம் லீக் மந்திரிகள் யுத்த ஏற்பாடுகளுக்கு உதவ அநுமதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆனுல் ஜனுப் ஜின்னு, தேசபாதுகாப்புச் சபையிலிருந்து லீக் அங்கத்தினர்களை விலகும்படி செய்துவிட்டார். காங்கிரஸ்காரர்கள் சிலரிடம் குறைகளிருந்தாலும் பாமர ஜனங்கள் காங்கிரஸிடம் பூரண நம்பிக்கை கொண்டு அவசர சமயத்தில் அதையே எதிர்பார்த்திருக்கின்றனர்.

## திருவாங்கூர் அரசாங்கத்தின் உத்தரவு

திருவனந்தபுரம் அக் 2—

எல்லா இந்துக்களையும் (ஹரிஜனங்கள் உட்பட) அநுமதிக்காத தனிப்பேர்வழிகளுக்குச் சொந்தமான கோயில்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் நன்கொடைகளை(பண உதவி) நிரந்தரமாக நிறுத்திவிடும்படி திருவாங்கூர் அரசாங்கத்தார் இப்போது உத்தரவிட்டிருக்கின்றனர்.

## கடிதம்

பாரதி திருநாளன்று (11.9.41)வெளிவந்த இந்துசாதனவிதழிற் பிரசுரிக்கப்பட்ட "பாரதி திருநாள்"என்ற எமது கட்டுரையைப்பற்றி 18.9.41 ல் வெளிவந்தவிதழில் விடுத்தகடிதத்தில் தெஹிவளை திரு. சோம. சரவணபவன் அவர்கள்குறிப்பிட்ட விஷயமறியாத வாசகர்களுக்கு ஓர்வேண்டுகோள்.

அன்பர்களே!

காத்திராப்பிரகாரமாக எண்ணுதலும் ஒருவர் கட்டுரையிற் புகுதல் இயற்கையே. முக்குணவசங்கடந்த முற்றறிவாளராயினன்றே அத்தகையன புகாதிருத்தல்கூடும்.

ஆனுல், குறித்த கட்டுரையிலிருந்து கடிதகாரர் எடுத்துக்காட்டிய பகுதியைப் பன்முறை வாசித்துப் பார்த்தோம். கடிதகாரர் கூறியவெதுவும் புகுந்திருப்பதாகத் தோன்றவில்லை. அன்பர்கள் பலருக்குக் காண்பித்தும் பார்த்தோம். அப்படி விபரீத விளக்கமாவது அவநம்பிக்கையாவது பிறத்தற்கு இடமிருப்பதாகத் தெரியவில்லையெனக் கூறுகின்றனர்.

ஞானிகள் பாடலின்போக்கு வேறு, பாரதியார்பாடலின் போக்கு வேறு. முன்னதின்போக்கு உலகை வெறுத்த போக்கு. பின்னதின் போக்கு உலகைவிரும்பிய போக்கு. இவ்விரு திறப் பாடல்களுக்குமுள்ள வேறுபாட்டையே எமது கட்டுரை தெரிவிப்பது.

"பருத்ததொந்தி நம்மதென்று நாமிருக்க நாய்நரிகள்
பேய்கழுகு தம்மதென்று தாமிருக்குந்தான்"

என்ற அடிகளை ஈடுபட்டுப் படித்தவர்களுக்கு உலகவாழ்வில் ஊக்கம் குன்றி வெறுப்பு உண்டாகுமென்பதை யாரால் மறுக்கமுடியும். இடியொலிபோல முழக்கும் "அச்சமில்லை"என்ற பாட்டில்,

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"

என்ற அடிகள் உலகவாழ்வின் ஊக்கமும் விருப்பமும் உதித்தெழச் செய்யுமென்பதற்கு என்னசந்தேகம். உள்ளதை உள்ளவாறு கூறியதில் விபரீதவிளக்கத்துக்கு இடமேது! நெருப்புச் சுடுமென்றும் நீர்குளிருமென்றும் சொன்னுல் அதில்என்ன அவநம்பிக்கை பிறக்கிறது. என்ன விபரீதம். ஞானிகளின் வாக்குகளின் உண்மைகள் அநுபவத்தோடொட்ட இருத்தலின் அவற்றில் நம்பிக்கை உண்டாகுமேயன்றி அவநம்பிக்கை பிறத்தற்கு இடமேயில்லையே.

ஆதலால் அன்பர்களே! கடிதகாரர் கூறிய விபரீத விளக்கமாவது அவநம்பிக்கையாவது பிறத்தற்கு எமதுகட்டுரையில் இடமின்றெனவுணர்க. உள்ளதை உள்ளவாறுணர்ந்து ஞானிகள் பாடலில்நம்பிக்கையுடையராய்ப் பாரதியார் பாடலில் வீரத்தையும் தீரத்தையும் ஊக்கமாகிய ஆக்கத்தையும் கண்டு இனிது வாழ்க.

இங்ஙனம்
க. குமாரவேலு

உடுப்பிட்டி
3.10.41


தமிழ் ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சை 1942

1942-ம் ஆண்டு பொருளி மாதம் முன்றும் செவ்வாய் கிழமை தொடக்கமாகத் தமிழ் ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சை நடைபெறும்.

2 பரீட்சார்த்திகள் — அ — [illegible] 1941-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் திகதி [illegible]

3 [illegible]

[illegible] 1938-ம் ஆண்டுப் பரீட்சையில் [illegible] 1940-ம் ஆண்டுப் பரீட்சையை [illegible]

ஆ. [illegible] 1940-ம் ஆண்டுப் பரீட்சையில் 2-ம் பகுதியில் [illegible]

4 [illegible]

1 [illegible] 1-ம் 2-ம் [illegible]

2 அ — [illegible]

3 [illegible] 1 — 24-ம் [illegible]

5 1941-ம் ஆண்டு [illegible] 12-ம் திகதிக்கு [illegible]

இப்பரீட்சைக்கான பாடத்திட்டங்கள் 1940-ம் ஆண்டு [illegible]

[illegible]

வித்தியாதரிசீ தரர்
கொழும்பு, 1941-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் [illegible]
G 6, 9 & 13-10-41


# மத்திய ருஷியாவில் ஜெர்மனியரின் தாக்குதல்

## மொஸ்கோவைக் கைப்பற்ற முயற்சி

மொஸ்கோ, அக் 7

ருஷியாவில் மத்திய பகுதியிற் பெரிய யுத்தம் நடைபெறுகிறதென்பதிற் சந்தேகமில்லை யென்பது "ரெட் ஸ்டார்"ல் வெளியான யுத்தச் செய்திகளிலிருந்து தெரியவருகிறது.

ஜூலைமாசத்தில் ஜெர்மானியர் மொஸ்கோவைக் கைப்பற்ற நேரே தாக்கிச் செல்வதற்காக முயன்று நிகழ்த்திய கோரயுத்தத்தின் பின்னர், இப்பகுதி அமைதியுறலாயிற்று. ருஷியர்கள் தளவாடக் குறைவின்றித் தாமாகவே இப்பகுதியில் போரைத் தொடங்கிஇப்போது நடத்துவாராயினர்.

ஆகவே, ஜெர்மனியர் மீளவும் நேரே இப்பகுதியைத் தாக்க முயலுவார்கள் போலத் தெரியவில்லை. அவர்கள் ருஷியப் பட்டாளத்தை ஊடுருவிச் சென்று தாக்கக்கூடிய "பின்சர்" இயக்கத்தைக் கையாள முயல்கிருர்கள் எனத் தெரிகிறது.

மத்திய யுத்த களத்தில் கோரமானபோர் நடைபெறுவது ஒருபுறமிருக்க, லெனின்கிராட்டைப் பாதுகாப்பதில் ருஷியர்கள் வியக்கக்கூடிய முறையிற் சித்தியடைகிருர்கள் எனத் தெரிகிறது. அவர்கள் கிறிமியாவை நோக்கி ஜெர்மானியர் முன்னேறுமல் தடுத்தும் வருகிருர்கள். இந்த இரு திசைகளிலும் ஜெர்மனியர் தமது தாக்குதல்களைக் குறைக்கவேண்டியவர்களாயினர். தமது படைகளில் ஒரு பகுதியை ஜெர்மனியர் லெனின்கிராட் யுத்த களத்திலிருந்து எடுத்து வேறிடங்களுக்கு அனுப்பியிருக்கலாம் என நம்புவதற்கு இடமுண்டு.

## வான் நியூராத்துக்கு உத்தியோக நீக்கம்

### மந்திரி சபைத் தலைமைப் பதவியிலிருந்து ஹிட்லர் நீக்கிவிட்டாராம்

லண்டன், அக் 4

ஹெர் ஹிட்லரின் ஆக்ஞையின்படி, பொஹிமியா மொரேவியா ஆகிய போஷணைநாடுகளின் பழைய ஜெர்மன் வழக்கறிஞரான பாரன் வான் நியூராத், ஜெர்மன் அந்தரங்க மந்திரிசபையின் தலைமைப்பதவியிலிருந்தும், மந்திரிசபையிலிருந்தும் விலக்கப்பட்டாரென்றும் மொஸ்கோ றேடியோ கூறுகிறது.

மந்திரிசபையிற் காலியாகவிருந்த ஸ்தானத்துக்கு ஜெர்மன் இரகசியப் பொலிஸ் பகுதித் தலைவர் ஹெர் ஹிம்லர் நியமிக்கப்பட்டாரென்று மேலும் அச் செய்தி கூறுகின்றது.

## வைஸ்ராய்-ஆனே பேட்டி

### 15-ந் தேதி பதவி ஏற்பார்

ஸிம்லா, அக் 5—

ஸ்ரீமான் எம். எஸ். ஆனே நிரந்தர எமிகிரேஷன் கமிட்டிக் கூட்டத்துக்காக இன்று இங்கு வந்திருக்கிருர். அவர் இன்று பகலில் வைஸ்ராயைக் கண்டு பேசுவார். கூட்டம் முடிந்ததும் அவர் ஸிம்லாவை விட்டுப் புறப்பட்டு அக்டோபர் 15-ந் தேதி பதவி ஏற்பார். இந்திய சட்டசபைக்கூட்டம் ஆரம்பமாவதற்கு ஒரு வாரத்துக்கு முன் டில்லிக்குப் போவார்.

# ஜெர்மானியருக்குப் பலத்த சேதம்

## மூன்றுபடைப் பிரிவுகள் நாசமாயின

லண்டன், அக், 7

எதியோப்பியாவிலுள்ள பெரக்கோப் பூசந்தியில ஜெர்மானியர்களுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறதென லண்டனில் நம்பத்தகுந்த இடத்திலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

லெனின் கிராட் நகருக்கு அருகாமையில் ஒரு ஜெர்மன் படைப்பிரிவு தடுக்கப்பட்டது. ருஷிய கப்பற்படையே அந்த ஜெர்மன் படையை முன்னேறுமல தடுப்பதற்கும் அதற்குப் பலத்த சேதங்களை விளைப்பதற்கும் பெருந் துணையாக இருந்தது.

தென்மேற்கெல்லையில் (உக்ரேன்) ஜெர்மானிய பிரிவுகளில் யந்திரப் படையொன்றும் டாங்கிப் படையொன்றும் ஆகாயவிமானத் தாக்குதலை எதிர்க்கும் படையொன்றுமாக மூன்று படைப் பிரிவுகள் நாசமாக்கப்பட்டனவென்றும், 5,500 ஜெர்மானியர் கொல்லப்பட்டனர் என்றும் டாஸ் ஏஜென்ஸிச் செய்தி ஒன்று கூறுகிறது.

சென்ற இரவு மொஸ்கோ மீதும் லெனின்கிராட்மீதும் குண்டுமாரி பெய்யப்பட்டதென ஜெர்மன் செய்தியொன்று கூறுகின்றது.

# சிவஞான போதம்

1-ம் பக்கத்தொடர்ச்சி

என வரும் அருமைத் திருவெண்பாவும் இங்கே சிந்திக்கத் தக்கது.

அசத்தை அசத்தென்று கண்டவிடத்துத் தோன்றும் பதிஞானத்தின் இயல்பு கூறி மேற்கோளை வலியுறுத்தல்.

இங்கே கூறப்பட்டவாறு அசத்தாகிய பிரபஞ்சத்தை அசத்தெனக் கண்டு நீங்கியவிடத்து வெறும் பாழாகிய சூனியந் தோன்றுமே யன்றி ஞான சொரூபந் தோன்றுவதில்லை என மாயாவாதிகள் கூறுவர்.

நிர்க்குணனாய் நின்மலனாய்
நித்தியா னந்தனுமாய்
தற்பரமாய் நின்ற
தனிமுதல்வன்—அற்புதம்போ
லாணவ மறிவா யவனிறந்து
தோன்றுமே
வானே முதல்களையின் வந்து.
(வெண்பா ௩)

என்பதனால் அவர் கூற்று மறுக்கப்படும்.

அசத்தென்று சொல்லப்பட்ட அசுத்தப் பிரபஞ்சம், மிச்சிரப்பிரபஞ்சம், சுத்தப் பிரபஞ்சம் என்பவற்றுள், அசுத்தப் பிரபஞ்சமெல்லாம் சத்துவம், இராசதம், தாமதம் என்னும் முக்குண மயமாதலினாலே அந்தச் சத்துவ குணத்தின் விருத்தியாகிய பிரகாச ரூபமும், சாந்த ரூபமும், சுக ரூபமுமாகவும், இராசத குணத்தின் விருத்தியாகிய பிரவிருத்திரூபமும், கோர ரூபமும், துக்க ரூபமுமாகவும், தாமத குணத்தின் விருத்தியாகிய நியமன ரூபமும், மோகரூபமுமாகவும் அளவிட்டறியப்படும். முதல்வன் இம் முக்குணங்களுங் கடந்தவர். ஆதலினாலே இவற்றாலொன்றும் அறியப்படார். பரமேசுரனை நிர்க்குணன் என்று கூறுவது இக்காரணம் பற்றியேயாம். இவ்வாறன்றி நிர்க்குணன் என்பதற்கு ஒரு குணமும் இல்லாதவர் என்று சொல்வது பொருத்தமற்றது. சிவபெருமான் தன்வயத்தனாதல் தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் எண்குணங்களை யுடையனாய் இருத்தலால் என்க.

பிரகிருதியைக் கடந்த வித்தியா தத்துவத்தின் பாலதாகிய மிச்சிரப் பிரபஞ்சம் முக்குணங்களைக் கடந்து நிர்க்குணமாயிருப்பினும் மலகன்மங்களோடு விரவி நிற்றலினாலே மலகாரியமாகிய மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்னும் எழுவகை ரூபமாகவும், துக்க ரூபமாகவும் அளவிட்டறியப்படும். சிவபெருமான் மல கன்மங்களையும் கடந்து நிற்றலினாலே மல கன்ம காரிய ரூபமாயும் அறியப்படத்தக்கவர் அல்லர்.

வித்தியாதத்துவத்தைக் கடந்த சிவதத்துவத்தின்பாற்பட்ட சுத்தப் பிரபஞ்சம் மல கன்மங்களையுங் கடந்து நின்மலமாயிருப்பினும் காரியப்பட்டு அநித்தியானந்த ரூபமாய் அறியப்படும். சிவபெருமான் அவ்வாறும் அறியப்படார். ஆதலினாலே நித்தியானந்தர் எனப்படுவர்.

இந்த மூவகைப் பிரபஞ்சத்தோடும் உயிர் கூடியிருந்தலாகிய பொது இயல்பினால் குணருபனாகிய சகலராயும் மலகன்மங்களோடு கலந்து நிற்கும் பிரளயாகலராயும் மாயை கன்மங்களில்லாது ஆணவத்தோடு கூடிய விஞ்ஞான கலராயும் அறியப்படுமாறுபோல அறியப்படாது அவ்வுயிர்கட்கு மேலாய் நிற்பர். ஆகலின் தற்பரன் எனப்படுவர். தற்பரன் ஆன்மாவுகருத் தலைவன். தன் என்றது ஆன்மாவை. இவ்வாறு பிரபஞ்சங்களின் இயல்புபற்றியேனும் உயிர்களின் இயல்பு பற்றியேனும் அறியப்படாத தனி முதலாகிய சிவபெருமான் அநாதிகோடி யோசனை நீளப் அகலமுடைய பிருதிவிமுதல மூலப்பிரகிருதிவரை ஒன்றக் கொன்று பத்துப் பத்து மடங்கு விரிவுடையதாயும் புருட தத்துவமுதல் அசுத்தமாயைவரை ஒன்றுக்கொன்று நூறு மடங்கு விரிவுடையதாயும், அதன் மேல் சதாசிவதத்துவம்வரை ஆயிர மடங்கு விரிவுடையதாயும் சத்தி தத்துவம்வரை லக்ஷமடங்கு விரிவுடையதாயுமுள்ள தத்துவ சமூகங்களாகிய இவற்றை அசத்தென்று நீங்குங்கால் அப்பிரபஞ்சங்களோடு பயின்றறிந்துவரும் ஆன்மாவின் கண் சுட்டுணர்வின் ஆளவினைக் கடத்தலால் இனைத்தென்று சொல்ல முடியாத சூனியப் பொருள்போல முன்னர்த் தோன்றிப், பின்னர்ச் சுட்டிறந்தறியும் ஆன்மாவின் கண்ணே சிவபெருமான் நீங்காது அறிவுக்கறிவாய் விளங்கித் தோன்றுவர்.

(வரும்)

## "காயகல்ப" அனுகூல சிகிச்சை

காயசித்தி, தத்துவக்குறைவு, சலரோகம், வாதம், சிறுபிள்ளை வாதம், வலி, தோற்புரை வியாதிகள், குட்டம், ஆதியாம் நோய்களுக்கு அனுகூலமான சிகிச்சை.

மேகராசா

சலரோகம், நீரழிவு ('அல்புமென்' அடையல், புளித்திராவகம், அதிக நீரழிவு ஆகிய எந்தநிலையிலிருப்பினும்) க்குக் கைகண்டமருந்து. பத்தியம் இல்லை. 15 நாட்களுக்குக் காணக்கூடிய போத்தல் ஒன்றுக்கு விலை ரூபா **4-00.**

சண்டிக்குளித்தபாற்கந்தோர்த் தலைவர்பின்வருமாறெழுதுகிறார்:-

நீரழிவுக்குரிய உங்கள் மேகராசா என்னும் மருந்தை நான் ஒரு மாசமாக உபயோகித்தேன். என் சலம் சுத்தமாகி விட்டது. இந்தச் சிகிச்சைக்காக உங்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்ஙனம்,
P. நடராஜா.

பின்வருவோரைக் கலந்தாலோசியுங்கள்:—

டக்டர் K. T. மங்களம்
R. I. M. P.
(சென்னை)
**M. S. V. S.** அங்கத்தவர்,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Q 82 7-8—6.11.41

## விசேஷ அறிவித்தல்

சம்பூரண கைரேகை பலன், ஆரூடம் (சிந்தனை சாஸ்திரம்) முதலிய சாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கீழ்க் காண்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.

கிரகஸ்புடம், தச வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவநிலை முதலிய கணித வகைகளும், மகா தெசா புத்தி பலன், துவாதச பாவபலன், கோசரபலன், கால சக்கரபலன் முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா **10/—**

நா. சின்னத்துரை
போக்கத்தை,
கைதடி வடக்கு, கைதடி.

Y 67 20-7.41—19-7.42

## பக்தர்கள் நோய்தீர வேண்டுமா?

உங்கள் நோய் கர்மநோயானாலுஞ் சரி இங்கிலீஷ், தமிழ் டாக்டர்களால் தீர்க்க முடியாத நோயைப் பழநியாண்டவர் அபிஷேக பஞ்சாமிர்தம் சந்தனம், விபூதி முதலாம் அருட்பிரசாதம் (போகசிஷி அவுடதம்) உட்கொள்ளத் தீர்ந்து சுகதேகமாகலாம்.

ஷை பிரசாதங்கள் தபாற்செலவுடன் ரூபா **5—0—0**

P நடராஜபண்டாரம்
பழனிக்கோவில் அபன்பிரான் பழநி

Q 92A 25-8.41—24-11.41(வி)


## குயீன்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை — நிறைந்த குணம்

எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊருத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.

இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.

( Y. 21. 11-8-40—10-8-41.) வி


# தமிழ் மரபு என்று ஒன்றுண்டு

1-ம் பக்கத் தொடர்ச்சி

பெயர்த்துச் சொன்னார். அவர் கேட்கும் கேள்விகளை எனக்குத் தமிழிலே எடுத்துச் சொன்னார்.

சம்பாஷணை நடந்துவரும்போது அந்தத் துவிபாஷி என் கையில் வைத்திருந்த ஏட்டுச் சுவடிகளைச் சுட்டிக்காட்டி, 'இந்தச் சருகுகளில் பிழை ஒன்றும் இராதா என்று துரைகேட்கிறார்' என்றார். எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ஓலைச் சுவடியைச் சருகு என்று அவர் மொழிபெயர்த்துச் சொன்னதுதான் அதற்குக் காரணம். சிரிப்பை அடக்கிக் கொண்டேன்.

எனக்கு விஷயம் விளங்கினாலும் அவர் சொன்னது தமிழன்று. அந்தச் சந்தர்ப்பத்தில் துரையின் வார்த்தையாகச் சொல்லுகையில் அப்படிச் சொல்லியிருக்கக்கூடாது. ஓலையைச் சருகென்றது சரியன்று. ஆனால் ஓலையைச் சருகென்று சொல்லும் மனிதரும் சந்தர்ப்பமும் சேர்ந்தால் அங்கே அது தமிழாக இருக்கும். அத்தகைய சந்தர்ப்பம் ஒன்று தமிழ் இலக்கியத்தில் வருகிறது.

ஓர் அரசன் மறவர் ஜாதியில் பிறந்த அழகிய பெண் ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறான். உடனே, தன் கருத்தைத் தெரிவித்து அப்பெண்ணைப் பெற்றவனுக்கு ஒரு கடிதம் எழுதுகிறான். அந்தக் காலத்தில் காகிதம் ஏது? ஓலையில் விஷயத்தை எழுதி ஒரு தூதன் மூலமாய்க் கொடுத்தனுப்புகிறான்.

அதன் மறவன் வீட்டுக்குப் போய் விஷயத்தைச் சொல்லி ஓலையை நீட்டுகிறான். படிப்பு வாசனையே அற்ற அந்த மறவனுக்கு அவ்வோலை அரசனது திருமுகமென்று உணரும் சக்தி இல்லை; 'என்ன ஈ இது. பனஞ்சருகை வாரிச் செருக்கிக் கொண்டு வந்திருக்கிறாய்? என்று கோபத்தோடு கேட்கிறான்.

'தீண்டரிய மடற்பனையின்
சருகை வாரிச்
சிற்றிரும்பாற் சுற்றிவரச்
செருக்கிக் கட்டி
நீண்ட தவுங் கருண்ட துமா
வரைந்து சுற்றி
திருமுமெனக் கொடுத்தெதிரே
நிற்கும் தூதா.'

என்று சொல்வதாக இருக்கிறது பாட்டு. படிப்பில்லாத மறவன் பேச்சிலே ஏட்டைச் சருகென்று சொல்வது தமிழாக இருக்கும். ஆனால் படித்தறிந்த ஒரு கனவான் பேச்சில் வரும்போது அது தமிழாகாது.

இப்படிப் பேச்சிலும் எழுத்திலும் தமிழல்லாதவை பல தமிழென்னும் பெயரால் மலிந்து கிடப்பதைப் பார்க்கிறேன். எழுதுபவர்கள் தமிழ்மரபை அறிந்து கொண்டு எழுத வேண்டும். மற்றப் பாஷைகளிலிருந்து கருத்தை எடுத்துக் கொள்ளலாம். வார்த்தைகளைக் கூட உசிதமாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவற்றைத் தமிழிலே இழைக்க வேண்டும்; தமிழாகவே ஆக்கிவிடவேண்டும்.

தமிழ் இலக்கண நூல்களுள் மிகப் பழமையான தொல்காப்பியத்தில் மொழிபெயர்ப்பைப்பற்றி வரும்போது, 'மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தல்' என்று ஆசிரியர் சொல்கிறார். அதர் என்பது வழி அல்லது மரபு, தமிழின் போக்கிலே மொழிபெயர்ப்பு அமைய வேண்டும். படித்தால் மொழிபெயர்ப்பென்று தோன்றுதபடி தமிழாகவே இருக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டே 'அதர்ப்பட யாத்தல்' என்று விரித்துச் சொன்னார்.

அந்த அதர் அல்லது வழிதான் தமிழ்மரபு; அதுவே தமிழுக்குக் கருதிப்பென்றது; தமிழ் மொழிக்கே சுவாசத்தைப் போன்றது. அந்த மரபு இல்லாவிட்டால் அது தமிழாகாது.

திருச்சி 21-9-41

# நாம் செய்த தென்ன?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அவர் தம் சமயத்தைப் போதிக்கவோ படிப்பிக்கவோ தமது சொந்தப் பாடசாலைகளைத் தமது சொந்த நாட்டிலே தாபித்து உபயோகிக்கலாம். வைத்திய சிகிச்சைக்கு வைத்திய சாலைகளைக் கட்டி நடத்தலாம். ஆனால் சுயதேசப்பற்றுள்ள தமிழர்கள் எந்தச் சமயத்தைச் சார்ந்தவர்களென்றாலும் சரி ஏன சுவதந்திரத்திற்கு உலகமெல்லாம் பாடுபடும் இக்காலில் பிறதேசத்தவர்கள் பாடசாலைகளையும் வைத்திய சாலைகளையும் ஆதரிப்பான் என்பதே எமது கேள்வி. சைவர்களாகிய நாமும் யாது காரணம் பற்றியோ எமது சிறுவர் சிறுமிகளை இன்னும் அந்நியர்கள் பாடசாலைகளுக்கனுப்பி வருகிறோம்? சைவமக்களாகிய நாம் அந்நியர் பாடசாலைகளிற் கல்வி கற்பதாலும் ஆத்மஞானத்தைப் புகட்டாத கல்வியைக் கற்பதாலும் நிதநிப்பில்லாத பேய்க் கரும்புக் கூட்டத்திற்குச் சமானமாகின்றோம். எங்கள் பெண்கள் அந்நியர் பாடசாலைகளில் விபரீதக் கல்வியைப் பயிலுவதாலும் அருட்கலையைச் சிறிதும் படியாததினாலும் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் இலட்சணங்கள் அற்றவர்களாகவும் உயரிய ஒழுக்கங் குன்றினவர்களாகவும் பேய்க காரர்களுக்குச் சமானமானவர்களாகவும் காணப்படுகிறார்கள். இது பொய்யன்று.

"ஒழுக்கம் விழுப்பந்தரலான் ஒழுக்கம்
உயிரினு மோம்பப் படும்" [கப்

என்றார் நான்முகனார்.

பெண்கள் உயர்வாகிய நல்லொழுக்கங் குன்றுவார்களானால் எங்கள் சனசமூக மென்றாகுங்கொல்! ஒரு சன சமூகத்தின பெருமை அந்தந்தச் சமூகத்தாரின் பெண்களுடைய நல்லொழுக்கம் குணம் நடையாலேயே சோபிக்கும். இன்னும்

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனுந்
திண்மையுண் டாகப் பெறின்"

என்றார் பெருநாவலர்.

ஆனதால் பெண்ணின் கற்பொழுக்கம், குணம் நடை முதலியவற்றை உயர்வாகிய சைவத் தமிழ்க் கல்வியை ஊட்டிக் காப்பாற்றி எமது சனசமூகத்தை உயர்த்தவேண்டியது எமது கடனன்றோ!

சைவப் பாடசாலைகளிலும் சைவ சாத்திரங்கள் ஓதப்படவில்லை என்றால் நாவலர் சைவப் பாடசாலைகள் வேண்டுமென்று அரும் பாடுபட்டுழைத்ததேனோ? எமது நாட்டுப் பரோபகாரிகள் — சைவாபிமானிகள்—பொதுநல வீரர்கள்—எமது நாட்டில் பல சைவப் பாடசாலைகளை ஸ்தாபித்ததேனோ? மாங்கனியென்றால் வாயினிக்குமா? வயிறு நிறையுமா? உண்டாலேதான உவப்புண்டாம். அதுபோலப் பெயர் அளவில் சைவப் பாடசாலையென்றால் அங்கு படிக்கும் பிள்ளைகளுக்குச் சைவ அருட்கலை பெருகுமா? நல்லொழுக்க மோங்குமா? ஆகவே சைவசாத்திரங்களையும் அருட் கலையையும் புகட்டுவதால்தான் நமது பாடசாலைகள் சைவப் பாடசாலைகளாகும். மாணவர்களுக்கு நல்லறிவைப் பயக்கும். கல்வியும் ஒழுக்கமும் சேர்ந்திருக்க வேண்டும். சமயக் கல்வி பெறாத மாணவர்களிடம் நல்லொழுக்கம் நிலவுமா?

"எந் நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்றார் முதற் பாவலர்.

ஆகவே நாம செய்ந்நன்றி மறவாதவர்களானால் இன்றிருந்த நாவலர் விருப்பப்படி எமது முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் அருட் கலைப் பெருக்கிற்கும் எமது பிள்ளைகளைச் சைவப் பாடசாலைகளுக்கனுப்பிவரல் வேண்டும். ஒவ்வொரு சைவப் பாடசாலையிலும் சைவசாத்திரங்களையும் தேவார திருவாசகங்களையும் திருமூல மந்திரங்களையும் ஓதுவித்தல் வேண்டும். அருட்கலைகளைப் பெருக்கல்வேண்டும். அருளிலார் ஆனமா தாயில்லாக் குழவிக்குச் சமானமன்றோ? சைவத் தமிழ்ப் பாடசாலைகள், ஆங்கிலப் பாடசாலைகள், பெண்பிடுதிப் பாடசாலைகள், பெண் அநாதப் பாடசாலைகள் இல்லாத முக்கிய ஸ்தலங்கள் தோறும் பாடசாலைகளை ஸ்தாபித்தல் வேண்டும். அப் பெரியார் விரும்பியதுபோலச் சைவப் பிரசாரணம் எங்கும் செய்வதற்கு ஆடவர்கள் மகளிரைப் பயிற்றி எடுத்து ஆக்காக்கனுப்புதல் வேண்டும். நாவலர் கிழமையென வருடத்தில் ஒருகிழமையை நாடெங்கும் சைவப் பணி செய்யவும் கொண்டாடவும் ஏற்படுத்தல் வேண்டும். இதுவே நாம் அவருக்கு அர்ப்பணம் செய்யக்கூடிய உருவச் சிலையாம். இதை அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபையும் அச்சபையின் கிளைச் சபைகளும் கவனிப்பதாக!

(வரும்)

## பத்திரக்கிரயம்

[illegible] தமிழ் ரூபா 6.00 இங்கிலீஷ் தமிழ் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீஷ் தமிழ் 12.00
தொலைதேச பகுதி 9.00 இங்கிலீஷ் தமிழ் 13.00
தனிப்பிரதி சதம் 5

முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(396 மீ)

**அக்டோபர் 10 வெள்ளி**

காலை 7-30 ஆரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 குரான்-இ-ஷரீப் 8 00 கவ்வாலி காத் (இசைத்தட்டு) 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 கே. ஆர். தங்கவேலு பாட்டு 9.00 ஒலிபரப்பு முடிவு.

1-00 சினிமாக்கீதங்கள்(இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 கே. ஆர். தங்கவேலு பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 சாத்தூர் எ. ஜி. சுப்பிரமண்யம் பாட்டு 5-45 அ இ சே வாத்தியக் கோஷ்டி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 ஆண்டான்கோவில் வி. கறுப்பையா பிள்ளை நாகஸ்வரம் 7.00 ராமுவும் சோமுவும் விஞ்ஞான ஆராய்ச்சி 7-15 இலக்கியவாசகம் இயற்கையும் இளங்கோவும் 7-30 அறிவிப்புகள் இடைவேளை (இசைத்தட்டு) 7-45 தமிழில் செய்திகள் 8-00 ஆண்டான்கோவில் வி. கறுப்பையாபிள்ளை நாகஸ்வரம் 8-30 உலக விவகாரங்கள் 8 45 சாத்தூர் எ. ஜி. சுப்பிரமண்யம் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

**அக்டோபர் 11 சனி**

காலை 7-30 ஆரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 திருவாசக விளக்கம் 8-00 பஜனை (இசைத்தட்டு) 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 சிதம்பரம் எம். கனகசபைப்பிள்ளை பாட்டு 9-00 ஒலிபரப்பு

1-00 ஸ்ரீமதி ராசலட்சுமி ஸ்ரீனிவாசன் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 சிதம்பரம் எம். கனகசபைப்பிள்ளை பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 ஸ்ரீமதி ராசலட்சுமி ஸ்ரீனிவாசன் வயலின் 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 மதராசில் உள்ளபடி 5-45 பிடித்த பாட்டுகள் (இசைத்தட்டு) 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 நாளவாத்தியக் கச்சேரி 7-00 செய்திச்சுடிதம் 7-15 புதிய வெளியீடுகள் 7-30 அறிவிப்புகள் இடைவேளை (இசைத்தட்டு) 7-45 தமிழில் செய்திகள் 8-00 சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை பாட்டு 9-00 இடைவேளை (இசைத்தட்டு) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு

**அக்டோபர் 12 ஞாயிறு**

காலை 7-30 ஆரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7.50 தேவாரம் (சோமன் சதவிக்) 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 படப் பாட்டுகள் (இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு

12-00 கதம்ப இசை (இசைத்தட்டு) 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-35 காஞ்சீவரம் எம் என் வெங்கடவரதபிள்ளை பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 ஸ்ரீமதி வி. சரஸ்வதி பாட்டு 2 30 ஒலிபரப்பு முடிவு

மாலை 5-00 காஞ்சீவரம் எம். என். வெங்கடவரதபிள்ளை பாட்டு 5 45 அ இ சே வாத்தியக்கோஷ்டி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமாந்திரநிகழ்ச்சிகள் 6-30 ஸ்ரீமதி பி. எம். குன்னிலட்சுமி அம்மா வீணை 7-00 சகுந்தலை இசைத்தட்டு 7-15 எல்பயிற்சி 7-30 அறிவிப்புகள் இடைவேளை இசைத்தட்டு 7-45 தமிழில் செய்திகள் 8-00 ஸ்ரீமதி பி. சரஸ்வதி பாட்டு 8-30 எங்கள்தபால் பெட்டி 8-45 பி. எம். குன்னிலட்சுமி அம்மா வீணை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு

**அக்டோபர் 13 திங்கள்**

காலை 7-30 ஆரம்பம் 7 40 தமிழில் செய்திகள் 7.50 திருச்சேறை கல்யாணசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 டாக்கிப் பாட்டுகள் இசைத்தட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு

1-00 தேசமங்கலம் சுப்பிரமணிய ஐயர் வீணை இசைத்தட்டு 1-15 என் வி. வசந்தகோகிலம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 எம். ஜீ. நாகேசுராஜிராவ்பாட்டு 2-00 தமிழில்செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு

மாலை 5-00 திருச்சேறை கல்யாணசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில்செய்திகள் 6-05 கிராமாந்திரநிகழ்ச்சிகள் 6 30 7-00 எம். ஜி. நாகேசுராவ் பாட்டு 7-15 எம். கே. தியாகராசபாகவதர் இசைத்தட்டு 7-15 செய்திசித்திரம் 7-30 அறிவிப்புகள் இடைவேளை இசைத்தட்டு 7-45 தமிழில் செய்திகள்

ரேடியோக்கச்சேரி

8-00 முடிகொண்டான் சி. வெங்கடராமையர் பாட்டு வி. சுந்தரேசன் வயலின் வானாடி சுப்பிரமணியபிள்ளை மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்புமுடிவு

## விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒரு கலம் ரூபா 10-00 அரைக்கலம் ரூபா 6-00
கால்கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூபா 1-00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

[illegible]


வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்

# புடைவைகள்

இப்போது யாழ்ப்பாணத்திலொவ்வொருவீட்டிலும் பேசப்படும் வார்த்தைகளாம்

ஒருமுறை பரீக்ஷித்தால்—
எப்போதும் விரும்பப்படுவது.

ஒவ்வொருவிதமான தினிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

| | |
|---|---|
| வேட்டிகள் | டிரில்லுகள் |
| சால்வைகள் | சூற்துணிகள் |
| சேலைகள் | ரகூர்கள் |
| சாரங்கள் | 'ஷேட்' துணிகள் |
| கம்பாய்கள் | ஷீட்டுகள் |
| துவாய்கள் | பஞ்சணை உறைகள் |
| லோங்குளோத்ஸ் | மேசைத்துணிகள் |
| மல்லுகள் | பப்ளின்கள் |
| பெட்ஷீட்டுகள் | பன்னல்துணிகள் |

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.
எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.

பெரியகடை, யாழ்ப்பாணம்.

வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ்,
(இந்தியாவில் ஸ்தாபிதமானது):
(அங்கத்தவரின் பொறுப்பு வரையறைக்கப்பட்டது.)

Mis 127, 11-10-40—

## திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுத்தது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம். உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி) (Y. 22. 1-11-40 to 31-10-41)

## சி. எம். சாமி மன்மதக் குளிகை

மிகுந்த பலத்தையும் ரத்த விருத்தியையும் உண்டாக்கும்

அநேக பரிசுகள் பெற்ற, உலகெங்கும் புகழப்பட்டது;
இதற்கு நிகரான ஔடதம் வேறில்லை
ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம்.

இழந்த சக்தியும் பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வாலிபசக்தி, இவற்றைத்தரவல்லது. எவ்வித பலஹீனம் இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளக்கும். கேட்லாக்கிற்கு எழுதுங்கள்.

அக்கியாட்டார் முன்பண மனுப்ப வேண்டும்

**60 குளிகை ரூபா 5** **20 குளிகை ரூபா 2**

தலைமை ஆபீஸ்:-
மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S

கிளை ஆபீஸ்:-
1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 143 செட்டியார்தெரு கொழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y 221 31-3-4 30-3-41

## தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள், சிமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.

"புரோப்ரைட்டர்" K. A. இரத்தினசிங்கம்

Y 19. 4-3.41—3.3.42


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponne East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday October 9th 1941.